# மங்கல மணமாட்சி

சிந்தனைச்செம்மல்

டாக்டர். ந. சஞ்சீவி



**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# மங்கல மனைமாட்சி

ஆசிரியர்கள் :

பேராசிரியை திருமதி கிருஷ்ணு சஞ்சீவி,
எம். ஏ., பி. டி., [பிஎச். டி.]
சான்றிதழ்-மனையியல், சான்றிதழ்-மொழியியல்.

செந்தமிழ் இலக்கியச் செம்மல்— நூலறி புலவர்,
பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி,
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.
பெருஞ்சான்றிதழ்-மானிடவியல், பெருஞ்சான்றிதழ்-
அரசியல்-ஆட்சியியல். சான்றிதழ்-மொழியியல்,
சான்றிதழ்-இயற்கை மருத்துவ இயல்
[சான்றிதழ்கள்: பிரஞ்சு, ஜெர்மன், புவியியல்,
உளவியல்] [பி.ஜி. எல்.]

வெளியீடு :

அருள்வாழ்வுப் பதிப்பகம்
'நடேச-நாராயண நிலையம்'
தலையாரித் தெரு,
மயிலாப்பூர், : : சென்னை-4.

விற்பனை உரிமை :

தமிழ்மணிப் புத்தகப் பண்ணை,
திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
சென்னை-5.

முதற் பதிப்பு : 1977
உரிமை ஆசிரியற்கே.

விலை ரூ. 3-75

அச்சிட்டோர் : ஜீவன் அச்சகம், சென்னை-5.

# கடவுள் வாழ்த்து

நீல மேனி வாலிழை பாகத்து
ஒருவன் இரு தாள் நிழற்கீழ்
மூ வகை உலகும் முகிழ்ந்தன முறையே.

ஐங்குறுநூறு - பாரதம் பாடிய பெருந்தேவனார்.

எங்களினும் சிறந்த எங்கள்

ஒருமகள்

திருமகள்

செல்வி - எழிலரசி (எம். எஸ்சி.)

அவர்கட்கு

நல்வாழ்த்துகளுடன்

—பேராசிரியப் பெற்றோர்கள்.

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

—திருக்குறள்-68

# ஆசிரியரின் மற்ற நூல்கள்

## இலக்கியம் :

சங்ககாலச் சான்றோர்கள்
சிலம்புத் தேன்
உணர்வின் எல்லை
ஆராய்ச்சிக் கட்டுரைகள்
காற்றிலே மிதந்தவை
சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்
இலக்கிய இயல்—அ, ஆ
கம்பன்—ஒரு கொம்பன் (அச்சில்)
கம்பன் நம்மவன் ( ,, )
வீடணன்—ஒரு திறனாய்வு ( ,, )

## வரலாறு :

மானங்காத்த மருதுப்பாண்டியர்
வேலூர்ப் புரட்சி
மருதிருவர்
1806
கும்மந்தான் கான்சாகிபு
வீரத்தலைவர் பூலித்தேவர்
இரு பெருந் தலைவர்

## ஆய்வியல் :

ஆய்வியல் அரிச்சுவடி (அச்சில்)

## பண்பாடு :

படிப்படியே தமிழ்ப் பண்பாடு (அச்சில்)

## பொது :

செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள்
கருத்து மலர்கள் (அச்சில்)

# நூலின் இழைகள்

★


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| | தறியாளர் தன்னுரை | ... | 7 |
| 1. | மங்கல மனைமாட்சி | ... | 17 |
| 2. | திருமணங்கள் – பழமையும், புதுமையும்<br>—பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி | ... | 36 |
| 3. | பிள்ளை வளர்ப்பு | ... | 64 |
| 4. | தாயும் மகளும்<br>—பேராசிரியை திருமதி கிருஷ்ணு சஞ்சீவி | ... | 84 |


★

# நூறியாளர் தன்னுரை

பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூல்முடியும் ஆறு.

உரத்தின் வளம்பெருக்கி உள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா—மரத்தின்
கனக்கோட்டம் தீர்க்குநூல் அஃதேபோல் மாந்தர்
மனக்கோட்டம் தீர்க்குநூல் மாண்பு. —நன்னூல்: 24, 25

* உயர்வுக்கும் உய்வுக்கும் உலகம்; உலக வாழ்க்கை.
* பிறவி நீக்கப் பிறவி.
* கடவுட் பிறவி காணவே மனிதப் பிறவி.
* உழத்தலும் உழைத்தலும் உயர்வுக்கே.
* துன்பமெல்லாம் இன்பத்திற்கே.
* இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
  வேளாண்மை செய்தற் பொருட்டு —திருக்குறள் 51.
  இது 'விருந்தோம்பல்' அதிகாரத்தில் முதற் குறள்.
* எத்தனையோ பிறவி எடுத்தெடுத்தே
  ஏற்றம் பெற வேண்டும் என்பது இயற்கை
  —இறைவன் கட்டளை.
* அந்த வகையில் அமைவதே இந்த இல்வாழ்க்கை.
* சிற்றின்பச் சீர்மையே—செழுமையே பேரின்பத்திற்கு வழி.

* இல்வாழ்க்கையில் ஏற்படும் துன்ப இடிகளும் இன்பப் பிடிகளும் பேரின்பப் பெருவாழ்விற்குப் படிகள்.

* * *

* தனிமனிதன் தழைப்பது வீட்டால்,
  வீடு தழைப்பது நாட்டால்,
  தனிமனிதன் அமைதி குலேவது வீட்டாலும்
  நாட்டாலும், வீட்டின்
  நாட்டின் அமைதி குலேவதும் ஒரோவழி தனிமனிதனுல்

  எனவே தனிமனிதன்—வீடு—நாடு மூன்றும்
  முத்தமிழ்போல் ஒருங்கிணேந்து
  செயற்பட்டாலே உயர்வு.

* தன்னலமே எல்லா அலேவு அல்லல்கட்கும் அடிப்படைக் காரணம். இந்நலம் குறையின் இன்னலம் ஏற்படும்.

* தன்னலத் தகர்விற்கு—பொதுநலப்
  பூப்பிற்கு—ஒரே வழி பொதுஉடைமை.

* பொதுவுடைமை பூக்க ஒரே வழி தீவிரக் கருத்துப் பரப்பே.

  இலட்சிய வெறி—குறிக்கோள் நெறி—கொண்ட இளேஞர்கள் மாணவ மணிகள்—என்றைக்குப் படையெனத் திரண்டு இது குறித்துச் சூள் கொள்கின்றனரோ அன்றே புதிய பாரதம் சூல் கொள்ளும்.

* பழைய பாரதப்போர் ஒரு குடும்பத்திற்காக நடந்தது; புதிய பாரதப்போர் ஒரு கொள்கைக்காக—ஒற்றைப் பொதுவுடைமைக் குடும்பத்திற்காக நடைபெற வேண்டும்.

* சக்திக்கேற்ற உழைப்பு

  தேவைக்கேற்ற ஊதியம்

திறமைக்கேற்ற வாய்ப்பு
தின்மைக்கேற்ற தண்டனை
நன்மைக்கேற்ற பரிசு,

இவை விதியாதல் வேண்டும்.

* உள்ளமும் உலகமும் ஒன்றை ஒன்று கட்டிக்கொண்டு ஊழற்கடலில் மூழ்குகின்றன. இந்த மூச்சுத் திணறலும் மூழ்கலும் ஒழிய பொது உடைமை ஒன்றே வழி.

* * *

* புது மணமக்கள் போலி மக்களாட்சியில் கண்டு கண்டு மனம் புழுங்கக் கூடிய காட்சிகட்குக் காரணம் கண்டு கொண்டால் 'அதிர வருவதோர் நோய்' இராது. அதனுல்தான் இந்த—இவ்வளவு—விளக்கம்.

* புது மணமக்கள் போலி மக்களாட்சியில் கண்டு கண்டு மனம் புழுங்கக் கூடிய காட்சிகட்குக் காரணம் கண்டு கொண்டால் 'அதிர வருவதோர் நோய்' இராது. அதனுல்தான் இந்த—இந்த அளவு விளக்கம்.

* புது மணமக்கள் தங்கள் திருமணத்திலேயே சாதி ஒழிப்புச் செய்திருந்தால் அது போற்றுதற்குரிய புனிதமாகும்.

சாதி இரண்டொழிய
　　வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா
　　நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர்
　　இடாதோர் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி

என்று 'நல்வழி'யில் பாடினுர் அவ்வையார் (ஆம். நல்வழி என்ற எளிய—இனிய—எல்லோர்க்கும் தெரியும் தொடர் கூட சன்மார்க்கம் என்ருகி விட்டதே!)

இனிமேல் 'இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்' என்று பேசுவதும் முட்டாள்தனம் என்றே கருதப்படும்—கருதப்படவேண்டும். காரணம் இட்டார்—இடாதோர்க்கான பொருளாதார வேறுபாடுகளை நீறுபாடுகளாக்கவே பொதுவுடைமைத் தீ.

* சாதி ஒழித்தாலே நீதி; தனிவுடைமைப் பேய் பெற்ற பிசாசே சாதி. சாதியை ஒழிக்க ஒரே வழி கலப்புத் திருமணமே. கலப்புத் திருமணம் செய்வோரே கடவுள் திருமணம் செய்வோர். 'அதெல்லாம் சரிதான்; ஆனால்...' என்று இழுத்துக் கொண்டே அன்றாட வாழ்வில் இழுக்குவோர் – வழுக்குவோர் மக்களுள் மணி அல்லர்; பதடிகள்.

* திருமண அழைப்பிலும் அறிவிப்பே மேல். கடவுள் நம்பிக்கை உடையவர் கோவில்களிலும் அஃது இல்லாதார் பதிவாளர் அலுவலகத்திலோ அல்லது பதிவாளரை அழைத்து வேறோர் இடத்திலோ திருமணம் கொள்ளலே பெருமைக்கு உரியதாகும். எவ்வகைத் திருமணச் சடங்கிலும் ஐம்பது பேருக்குமேல் இருத்தல் தேவை இல்லை; தீமை. திருமணத்தை ஒட்டி நண்பர்கட்குச் சிறப்புகள் செய்யத் துடிப்போர் படிப்பதற்குரிய நூல்கள் முதலாக (இரு பொருளிலும்) பயனுடைய அன்பளிப்புகள் தரலாம்.

* திருமணம் ஒரு உடல்—உள்ள—உயிர்த் தேவை. தேவை நீங்கியபின் அது தீமை. இல்லையேல், ஒருமுறைக்கு இருமுறை திருமணம் புரிந்து கண்ணிழந்து கண்ணீர் வடித்த இன்பச் சுந்தரர் இறுதியில் 'வெறுத்தேன் மனை வாழ்க்கை' என்று பாடுவாரோ?

* எந்தப் பிறவியில் இயற்கையாய்த் திருமண வேட்கை உடலிலும் உள்ளத்திலும் இல்லாமல் போகிறதோ அந்தப் பிறவியே தெய்வப் பிறவி. இராமலிங்கர்,

இராமகிருட்டிணர், அரவிந்தர், முதலியோர் இவ்வுண்மைக்கு அறிவியற் காலத்து அருமையான எடுத்துக் காட்டுகள்.

செயற்கைக் கட்டுப்பாடுகள் (குடும்பக் கட்டுப்பாடு) முதலானவை மட்டுமன்றி இயற்கை கட்டுப்பாடுகள் எல்லாம் ஏற்போமாக!

வாழ்க்கையைக் கற்கண்டாய்ச் சுவைத்துக் கற்பூரமாய்ப் பயன் படுத்துவோமாக!

சஞ்சீவி–கிருஷ்ணு

*15–7–1977*

அமரர்–தலைவர்–காமராசர் பிறந்தநாள்.

புரவலர்–நேஷனல்–முனிசாமி முதலியார் பிறந்தநாள்.

புரட்சிக் கவிஞர்
பாரதிதாசன் **வரையறை !**

உரையமுதம் :

குடும்ப முன்னேற்றமே
நாட்டின் முன்னேற்றம்!

நல்ல குடும்பம் பல்கலைக் கழகம் !

நன்றி :

—குடும்ப விளக்கு :
கவிஞர் கருத்து.
[*1960 / 1963 / 1966*]

[இக்குறிப்பை வெளியிட
இசைவு தந்த புரட்சிக் கவிஞர்
குடும்பத்தாருக்கு நன்றி]

# எண்ணக் களஞ்சியத்தில் பெண்!

திருமணம்! மனிதனிடமிருந்து
வேறெதுவும் இவ்வளவு விலை கேட்பதில்லை!

—இப்சன்

ஊடல்கள் கோடிட்ட நீண்ட
உரையாடல் திருமணம்!

—ஆர். எல். ஸ்டீவன்சன்

அவசரத் திருமணம் அமைதியில் அவலம்!

—காங்கிரிவ்

வறுமையில் மட்டும் துன்புறும்
ஓர் இணையைக் காட்டுங்கள்; நான்
வேறு காரணங்களால் துன்பறும்
பத்து இணைகளைக் காட்டுகிறேன்!

—கால்ரிட்ஜ்

கர்வம் நிறைந்த கன்னிமையினும்
அடக்கம் நிறைந்த மணவாழ்வு மிக மேல்!

—அகஸ்டின்

ஆத்மாவின் அமரத் தன்மையை நம்புவது போல் ஒருவன் திருமணத்தையும் நம்ப வேண்டும்!

—பால்சாக்

அவசரத் திருமணங்கள் வெற்றியாதல் அருமை!

—ஷேக்ஸ்பியர்

மாந்தர் திருமணத்திற்கு முன்பு
நன்றாக விழித்திருக்க வேண்டும்;
திருமணத்திற்குப் பின் அரைப்பார்வை
யாகவே இருக்க வேண்டும்.

புரட்சிக் கவிஞர்
பாரதிதாசன் **வாழ்த்து!**
பாட்டமுதம் :

# திருமண வாழ்த்து!

ஒருமன தாயினர் தோழி—இந்தத்
திருமண மக்கள் என்றும் வாழி!

பெருமன தாகி இல்லறம் காக்கவும்
பேறெனப் படும்பதி ஞறையும் சேர்க்கவும்
ஒருமன தாயினர் தோழி
... ... ... ... ... ... ... ... ... ...

இந்நாள் போல எந்நூற் ருண்டும்
இன்பம் எனவே ஒவ்வோர் இமைப்போதும்
தாண்டும்!
செந்தமிழ் நாட்டிடைத் தொண்டுகள்
யாண்டும்
செயத்தக்க மக்களை இவர்பெற வேண்டும்
ஒருமன தாயினர் தோழி!

நன்றி :

—இசையமுது—2-ஆம் பகுதி

[1952 / 1960 / 1967]

# நன்றியுரை

*'சில நேரங்களில் சில மனிதர்கள்' அமைவது ஆண்டவன் அருள்; முன்னே செய்த நல்வினை.*

> **கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை**
> **நீட்டி அளப்பதோர் கோல்**
>
> *—திருக்குறள் 796*

இரத்தம் சுண்ட யான் உழைத்த உழைப்பை எல்லாம் உண்டு களித்தவர்களும் என்னை ஏறெடுத்துப் பார்க்கவும் விரும்பாத நெருக்கடி நேரத்தில்—'என்னைப் பார்ப்பதும் ஆபத்து' என்ற 'காந்தி'யர்களின் 'அறிவுரை'களையும் துச்சமாய் மதித்து எனக்கும் என் குடும்பத்திற்கும் ஆறுதலாய் இருந்தவர் முஸ்லீம் உயர் நிலைப் பள்ளியில் பணிபுரியும் ஓர் இந்து! சாதி வகையால் எனக்கோ என் குடும்பத்துக்கோ எந்த வகையிலும் உறவு இல்லாத ஒருவர்! என்னினும் பொருளாதார வசதிகள் குறைவான ஓர் அருட் செல்வர்! ஆம். அவர்தான் முற்றிலும் யான் தமிழை வெறுத்து விடாமல் காப்பாற்றிய தமிழாசிரியர் பெருங்கவிக்கோ உயர்திரு வா. மு. சேதுராமன் அவர்கள்.

குழந்தைகள் பல பெற்றுக் குழியில் போட்டுவிட்ட என் பெற்றோர்கள் இராமேசுவரம் போய் என்னைப் பெற்றார் களாம். அதனால்தான் என் தமக்கைக்கு 'தனுக்கோடி' என்றும் எனக்கு 'சஞ்சீவி' என்றும் பெயர் வைத்தார்களாம்! எனவே எனக்கும் திரு—சேது இராமனுக்கும் நெருக்கடி நேரத்தில் நெருங்கிய நட்பு ஏற்பட்டது 'விட்டகுறை; தொட்டகுறை' ஆம். நிறைவான குறை!

யான் மதித்து வணங்கும் ஒரு தமிழராக விளங்கும் பெருங்கவிக்கோ அவர்கள் திருமகன் — திருவள்ளுவன், (பி. காம்.) ஒரு புத்தக வெளியீட்டகம் தொடங்க விரும்பிய போது—மாலைக் கல்லூரியில் படித்துக்கொண்டே பகல் பணி புரிய நினைத்தபோது—ஆசிரியர்களினும் மாணவர்களை அதிக மாக மதித்து அன்பு பாராட்டும் என் உள்ளம் உருகியது. அதன் விளைவாகவே 'மங்கல மனைமாட்சி' முதலாக எங்களு டைய சில நூல்களை விற்பனை உரிமை வெளியீட்டிற்குத் தர இசைந்தோம்.

இந்நூல் இந்திய விடுதலை நன்னாளில் — அதுவும் மாபெருந் தேர்தல் புரட்சி ஒன்று நடந்து முடிந்த நிலையில் கொண்டாடப்படும் முதல் இந்திய விடுதலை நன்னாளில்— வெளியிடுவது நாங்கள் செய்த நற்றவம்.

இந்நூல் இதன் மறு பதிப்பில் இன்னும் விரிவு பெறும்.

திருமண விழா அன்பளிப்பாக வழங்க ஒரு நூல் வெளி யிடவேண்டும் என்ற என் ஆசையை நிறைவேற்றிய ஆண்ட வனுக்கு வணக்கம்; அனைவருக்கும் நன்றி.

ந. சஞ்சீவி

*15—8—77 (இந்திய விடுதலை நாள்)*

# மங்கல மனைமாட்சி

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

—பொதுமறை.

மண்ணினல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்:ஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை இருந்ததே.

—திருஞானசம்பந்தர்.

தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடி
பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ!

—மாணிக்கவாசகர்.

## சமுதாயத்தின் உயிரணு குடும்பம்

ஒரு சமுதாயத்தின் உயிரணு குடும்பம். அக் குடும்பத்தின் இருபெருஞ் சக்திகள் தலைவனும் தலைவியும் — ஆணும் பெண்ணும் — மணமகனும் மணமகளும். இவ்வுண்மையை மிகு பழங்காலம் முதலாக ஓர்ந்து உணர்ந்து தேர்ந்து தெளிந்து உலகிற்கு உணர்த்திய பெருமை நம்தமிழ் முன்னோர்களின் தனிச் சிறப்பாகும்.

## திருமணம் என்ற சொல்லின் நறுமணம்

திருமணம் என்ற சொல்லே அழகிய அரிய சொல். அதில் 'திருவு' முண்டு; மணமுடைய திருவுமுண்டு. கல்வியோடு செல்வமும் சேர்ந்தால் பொன் மலர் நாற்றம் (நல்வாசனை - நல் மணம்) பெற்றது போலாகும் என்று பாடினார் ஒரு பெரியார். 'திருமணம்' என்ற சொல்லில் 'பொன் மலர்' நாற்றம் பொங்குகிறது அல்லவா? தமிழ் மக்கள் தங்கள் வாழ்வின் சிறப்புடைய நிகழ்ச்சி ஒன்றிற்குத் திருமணம் என்று பெயர் வைத்ததே அவர்கள் அறிவின் பெருமையை அளந்து காட்டு கிறது; அச் சொல்லிலிருந்து எழும் நறுமணம்—திருமணம்—நம் உள்ளத்தை எல்லாம் கொள்ளை கொள்ளுகிறது.

மனிதன் எதற்காகத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்? இதுவே முதற் கேள்வி. இக் கேள்விக்குப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் தாம் பாடியுள்ள அருமையான நாடகக் காப்பியமாகிய 'மனோன்மணியம்' என்ற நூலில் அழகான பதில் தந்துள்ளார். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை கல்விக் கடல்; கற்பனைச் சுரங்கம்; தத்துவ மனை; தமிழ்ச்சுனை. எனவே, அப் பெரியாரின் வாசகம் தெவிட்டாத தெள்ளமுதாய்ப் படிப்பவர் எல்லார்க்கும் இன்பமும் பயனும் வழங்குதல் திண்ணம.

கற்பனைக் கெதிராய் அற்பமும் மொழியேன்;
ஆயினும் ஐயமொன் றுண்டு; நேயமும்

ஆக்கப் படும்பொரு ளாமோ ? நோக்கில்
துன்பே நிறையும் மன்பே ருலகாம்
எரியும் கானல் விரியும் பாலையில்
திரியும் மனிதர் நெஞ்சஞ் சிறிது
தங்கி அங்கவர் அங்கங் குளிரத்
தாருவாய் தழைத்தும் ஓயாத் தொழிலில்
நேருந் தாகம் நீக்குவான் நிமல
ஊற்று யிருந்தவ ருள்ளம் ஆற்றியும்,
ஆறலைக் கள்வர் அறுபகை மீறில்
உறுதுணை யாயவர் நெறிமுறை காத்தும்
முயற்சியாம் வழியில் அயர்ச்சி நேரிடில்
ஊன்றுகோ லாயவர் ஊக்க முயர்த்தியும்
இவ்விதம் யாரையுஞ் செவ்விதிற் படுத்தி
இகத்துள சுகத்திற்கு அளவு கோலாகி,
பரத்துள சுகத்தை வரித்தசித் திரமாய்
இல்லற மென்பதன் நல்லுயி ரேயாய்,
நின்ற காதலின் நிலைமை நினையில்
இரும்பும் காந்தமும் பொருந்துந் தன்மைபோல்
இருவர் சிந்தையும் இயல்பா யுருகி
ஒன்றுந் தன்மை யன்றி, ஒருவரால்
ஆக்கப் படும்பொரு ளாமோ ?
வீக்கிய கழற்கால் வேந்தர் வேந்தே !

*மனோன்மணியம்—1 : 4 : 82—105.*

இது பாண்டிய மன்னன் சீவக வழுதியிடம் அவன் ஒரே மகள் மனோன்மணியின் தோழியாகிய வாணி கூறிய வண்ண மொழிகள். இயல்பாகவே எளிய நடையில் உள்ள இவ்வாசகத்தின் விளக்கம் இதுதான்.

துன்பமே நிறைந்தது—நிலேத்தது—இப்பெரிய உலகம். எரிகின்ற கானலாகவும் விரிகின்ற பாலே வனமாகவும் விளங்குவது இந்த வையகம். இதில் திரிகின்ற மனிதர் கொஞ்சம் தங்கி உள்ளம் குளிரவும் உடல் குளிரவும் உதவும் மர நிழலாய்த் தழைத்திருப்பது இந்த மனேமாட்சி—குடும்ப வாழ்வு. ஓயாமல் உழைக்கும் மனிதனுக்கு உண்டாகும் தாகம் நீங்கி அவன் உள்ளத்தைக் குளிரவைக்கும் மாசில்லாத ஊற்று இந்த மனேயறம். போகும் வழியில் அலேவுசெய்து அடித்துப் பிடித்துத் துன்பம் செய்யும் திருடன் போன்ற ஐம்புல வேடர்கள் அவதி அதிகமாளுல் போகும் வழி—ஒழுக்கம் நிறைந்த உயரிய வழி—இன்பம் நிறைந்து இயங்க உற்ற துணேயாகி நெறிமுறை காப்பது இம்மனே வாழ்க்கைதான். வாழ்க்கையில் மேலும் மேலும் செய்துகொண்டே போகும் முயற்சிகளில் அயர்ச்சி தோன்றிளுல ஊன்றுகோலாய் இருந்து ஊக்கம் கொடுப்பது இந்தக் குடும்ப வாழ்க்கைதான். எல்லோரையும் நல்லோராக்கி மண்ணுலகத்து இன்பத்திற்கெல்லாம் அளவுகோலாகி விண்ணுலகத்து இன்பத்தை எல்லாம் வழங்கும் இன்ப ஓவியமாய் விளங்குவதும் இந்த இல்வாழ்க்கைதான். ஆம்; எல்லோர்க்கும் எல்லாம் பாலிப்பது இந்த இல்வாழ்க்கை. இத்தகைய இல்லறத்தின் இன்னுயிர் அன்பு—அன்பு—அன்பு, காதல்—காதல்—காதல்.

அன்பு என்பதும் காதல் என்பதும் வெறுஞ் சொற்களல்ல. இரும்பும் காந்தமும் ஒன்றனே ஒன்று கவ்விப் பற்றிக்கொள்வதுபோல தலேவன் தலேவி—

கெற்றுண் டகன்று பற்றெரன் றின்றி
ஆசையாம் திசைதொறும் அலைந்து திரிந்து
கெடாவணங் கடாவிக் கெழுமிய அன்புசேர்
அறப்பிடி கடப்பிடி யாகக் காட்டிச்
சிறப்புயர் சுகத்துறை சேர்த்துசுக் காணுய்,
நின்றது மங்கையர் நிலைமை யென்று
நினையா மனிதர், விலங்கினுங் கீழாய்
அனையார் தருசிற் றின்பமே யவாவி
வாழ்க்கைத் துணையா வந்தவர் தம்மைத்
தாழ்த்துஞ் சேரு மாற்றுவர், தவத்தால்
மந்திரவாள் பெற்று மாற்றலர். வெல்லாது
அந்தோ ! தம்மெய் யரிவார் போலத்
தனியே தளருந் தமக்குத் துணையாய்
வருபவர் தமையும் பகைவராய் நலிந்து
பாலையும் நஞ்சாப் பண்ணுவர். அவர்தம்
மதிகே டென்னே ! துதிபெறு மன்புநற்
குணமு முளாரில் துணைவ ராயின்
இல்லதென் னுலகில் ? இவற்றுடன் கல்விசேர்
நல்லறி வுளதேற் பொன்மலர் நாற்றம்
பெற்றவா றன்றே ? எற்றே மடமை!
கேட்டிட வேட்டவை யாவையும் ஈயும்
கற்பக தருவென அற்பமுங் கருதாது
அடியுடன் முறித்து முடிபுற வெரித்துக்
கரிபெற முயன்ற கம்மிய னேயென,
தனக்கென வாழுந் தனிமிரு கத்தின்
மனக்கோள் நிமிர்த்து மற்றைய ரின்பமுந்
துன்பமுந் தனதா அன்புபா ராட்ட,
மெள்ளமெள் ளத்தன் உள்ளம் விரித்துப்
பொறையுஞ் சாந்தியும் படிப்படி புகட்டிச்
சிறிது சிறிதுதன் சித்தந் தெளித்துத்

தானென்னு நினைப்புந் தனக்கென்னு மிச்சையும்
ஒய்வுறச் செய்து,மற் றென்றும் நின்ற
எங்கு நிறைந்தபே ரின்ப வெள்ளம்
மூங்கி யதனுள் மூழ்கிட யாரையும்
பக்குவஞ் செய்யுநற் பள்ளிச் சாலை!

*மனோன்மணியம்—2 : 2 : 139—183.*

இந்தக் குற்றமற்ற உலகத்தில் உயிர் வாழ்க்கை ஒரு பெருங்கடலைப் போன்றது. ஆம்: பிறவி ஒரு பெருங்கடல். இப் பெருங்கடலில் ஓங்கி யெழும் அலைகள் மேலே செல்லும் கப்பலைப் போன்றது ஆண் மக்களுடைய நெஞ்சம். அறமாகின்ற துறைக்குள் புகாமல் எட்டுத் திக்கிலும் எற்றி அடிக்கும் புயற்காற்றுப் போன்ற நிலையில்லாத எண்ணங்களால் அலைப்புண்டு எங்கெங்கோ சென்று நல்லறிவினறி அலைந்து அல்லற்படுவது இவ்வான்மாக்களின் நெஞ்சமாகிய கப்பலின் இயற்கை. அத்தகைய கப்பலை அறத்துறையாகிய குடாவில் நிலையாக நிற்கும்படிச் செய்கின்ற நங்கூரமாவாள் இன்றைய மணமகள் — வாழ்க்கைத் துணைவி. அத்தோடு மனிதன்—ஆண்மகன்—செய்கின்ற வாழ்க்கை முயற்சிகளில் எத்தனையோ, பொய்வகையான புன்னெறிகள் சேரும்; சாடும். அதனால் ஆசையாகின்ற திசைதோறும் அலைந்து திரிந்து கெடாதவண்ணம் அமைதிவழி செலுத்தி அன்பு சேர்ந்த அறத்தையே உறுதியாகப்பற்றிச் சிறப்புடைய சுகத்துறை சேர்க்கின்ற சுக்கான்— இன்றைய மணமகள் — வாழ்க்கைத் துணைவி. ஆனால், இத்தகையது நம் தமிழ் மங்கையரின்,

தகுதி என்பதை நினையாது ஆண்மக்களுள் சிலர் விலங்கினும் கீழாய் நடந்து கொள்ளுகின்றனர். பெண்ணின் உடலின்பமே பெரிதென்று விரும்பி வாழ்க்கைத் துணையாய் வந்தவரைச் சேருய்தம்மை தாழ்த்தும்போதும் — துன்பச் சேருய் ஆக்கிவிடு கின்றனர் ; ஒருவர் பெருந்தவம் செய்து மந்திர வாள் பெற்ருன் என்று வைத்துக்கொள்வோம். அவன் அவ்வாள் கொண்டு பகைவரை அல்லவோ வெட்டி வீழ்த்த வேண்டும் ? அப்படிச் செய்யா மல் தன் உடம்பையே அவ்வாளால் அரிந்துகொண் டால் எப்படி இருக்கும்? அதுபோல ஒருவனுக்கு நல்ல மனையாள் வாய்ப்பது என்பது பெருந்தவம் புரிந்து மந்திரவாள் பெறுவதுபோல் ; அம் மந்திர வாளை—பனை மாட்சியின் மங்கலப் பொருளை—தக்க தற்கு அன்ரோ பயன்படுத்த வேண்டும் ! தனிமை யில் தளரும் தமக்குத் துணையாய் வரும்வரையும் பகைவரால் சிலர் நினைந்து நலிந்து பாலையும் நஞ் சாய்ப் பண்ணுவர் பலர். அவர்தம் அறிவுகெட்ட நிலையை என்னென்பது!

ஒருவனுக்கு அன்பும் பண்பும் உடைய ஒருவர் வாழ்க்கைத் துணைவியாக வாய்க்கப் பெற்ருல் அவர்கட்கு வையகத்தில் எதுதான் கிடைக்காது? எல்லாம்—நல்லன எல்லாம்—கிடைக்கும். அன்பும் பண்பும் அமைவதோடு வாழ்க்கைத் துணைக்கு நல்ல அறிவும் அமைந்துவிட்டால் பொன்மலர் வாசனை வீசியது போலல்லவா ஆகும் ? அப்படி அமைவது விரும்பியதை எல்லாம்—வேண்டியதை எல்லாம்—தரும் கற்பகத்தரு கிடைத்ததைப்

போலல்லவா? ஆயினும்—இத்தகைய நல் மனைவி கிடைத்தும்—ஒரு சிலர் கற்பக மரத்தைக் கரிக்காக வெட்டி எரித்ததுபோல—நடந்துகொள்ள நினைக்கிறார்கள். காரணம் தனக்கென வாழும் தனி மிருகத்தின் மனக்கோணல்! ஆனால், அந்தக் கோணலை நிமிர்த்திடும் செந்தமிழ் கவி இன்பம் போலச் சிறந்த இன்ப வாழ்க்கை இல்லற வாழ்க்கை மனைவாழ்க்கை வாழ வாழ மலரும் மாட்சி பெரிது! மிகப் பெரிது! அரைக்க அரைக்க சந்தனப மணப்பது போன்றது அது!

மனைமாட்சி ஒருவனுக்கு மனமாட்சி தரும்! பிறர் இன்பத்தையும் துன்பத்தையும் தன்னதாகக் கொண்டு அன்பு பாராட்டச் செய்யும். கதிரவனைக் கண்ட தாமரை தன் இதழ்களை மெல்லமெல்ல விரிப்பதுபோல ஒருவன் மனதை மனை மாட்சி மலரச் செய்யும்! பொறுமையையும் அமைதியையும் படிப்படியாய்ப் புகட்டும்! சிறிது சிறிதாக சித்தம் தெளிவிக்கும்! வாழ்க்கை உண்மைகளை—அடிப்படை உண்மைகளை வண்ணவண்ணமாய் உணர்த்தும்; 'தான்' என்னும் அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுத்து எறியும்! எரிக்கும்! 'தனக்கு' 'தனக்கு' என்று அடித்துக்கொள்ளும் ஆசையை அடக்கும். எங்கும் நிறைந்த பேரின்ப வெள்ளத்தில் எவரையும் முங்கச் செய்யும்; மூழ்கச் செய்யும்.'

ஆம். அமரகவி பாரதியார் பாடியதைப் போல,

கோல மிட்டு விளக்கினை ஏற்றிக்
  கூடி நின்று பராசக்தி முன்னே
ஓலமிட்டுப் புகழ்ச்சிகள் சொல்வார்
  உண்மை கண்டிலர் வையத்து மாக்கள் ;
ஞால முற்றும் பராசக்தி தோற்றம்
  ஞான மென்ற விளக்கினை யேற்றிக்
கால முற்றும் தொழுதிடல் வேண்டும்
  காத லென்பதோர் கோயிலின் கண்ணே !

பாரதியார் —அந்திப்பொழுது.

என்று மனம்விட்டு—வாய்விட்டு நாமும் பாடலாம் ; பாடி மகிழலாம்.

இப்படியெல்லாம் பாறை மனதை 'நெஞ்சுக் கனகல்லை'—பனி மலராய்ப்—பஞ்சுபோலும் முல்லை மலராய் முகிழ்க்கச் செய்வது—பக்குவப்படுத்துவது—மணமாட்சியாம் ; அது — பக்குவஞ் செய்யும் நற்பள்ளிச் சாலையாம் !

## திருமணம் எப்படி ?

இனி இத்தகைய நலம் பல நல்கும் திருமணங்களை எப்படிச் செய்தல் வேண்டும்? எளிமையாகச் செய்தல் வேண்டும். முதலாவதாக நமது சமுதாயத்தில் வேண்டுவது அதுவே. 'ஏழைகள் அப்படிச் செய்வதைத் தவிர வழியில்லை—செல்வர்களுமா அப்படிச் செய்வது ?' என்று சிலர் கேட்கலாம். ஆம். செல்வர்கள்தான் திருமணங்களை எளிமையாகச் செய்து வழிகாட்ட வேண்டும். அவர்கள் செய்யும் வெற்றாரவாரங்களை—வீண் ஆரவாரங்களைப் பார்த்துத்தான்—ஏழைகளும் இப்படிச் செய்தால்தானே

மதிப்பு என்று எண்ணி ஏங்குகின்றனர். அந்த மதிப்பைத் தேடிக்கொள்ளக் கடன்பட்டு உள்ள 'மதிப்பை'யும் இழக்கின்றனர். இந்த நிலை மாற வேண்டும். என்றேனும் ஒரு நாள் சட்டம் வந்து கட்டாயமாக மாற்றுவதிலும் நாமே அறிவாக எண்ணிப் பார்த்து மாறிவிடுவது எவ்வளவோ நல்லது அல்லவா? நம் நாட்டுத் திருமணங்கள் — செல்வர் வீட்டுத் திருமணமாயினும் — ஏழை வீட்டுத் திருமணமாயினும்-ஆண்டவன் கோயிலில் எம்பெருமான் - எம்பெருமாட்டித் திருமுன்பு நடந்தால் எவ்வளவு அழகாக இருக்கும்!

'செல்வர்கள் திருமணத்தில் செய்யும் பெருஞ் செலவு அவர்கள் செல்வத்திற்கு அழகுதானே. அவர்களைச் செலவழிக்க வேண்டாமென்றால் பணத்தைப் பூட்டியே வைப்பதா? என்று ஒரு கேள்வி கேட்கலாம். திருமணத்தின்போது செல்வர்கள் செய்யவேண்டிய ஒருபெருஞ்செயல் அத் திருமண நினைவாக நாட்டின் கல்விக்கூடங்கட்கு மன முவந்து பெருங்கொடை வழங்குவதே. ஒரு நாட்டின் வளர்ச்சி எல்லாம்—வாழ்வு எல்லாம்—அந் நாட்டுக் குழந்தைகள் பெறும் கல்வி—நல்ல கல்வி —பயனுடைய கல்வி — படிப்போடு நல்ல பழக்க வழக்கங்களை வளர்க்கும் கல்வி—அறிவோடு ஒழுக்கத்தை வளர்க்கும் அருமையான கல்வியிலேதான் இருக்கிறது. எனவே அக்கல்வி வளர ஏராளமான பள்ளிக்கூடங்கள் தேவை. 'வீடுதோறும் கலையின் விளக்கம்; வீதிதோறும் இரண்டொரு பள்ளி' என்று பாடினர் கவியரசர் பாரதியார். ஆம். வீதி

தோறும் இரண்டொரு பள்ளி! ஒரு பள்ளி கலைப் பள்ளி ; மற்றொன்று தொழிற்பள்ளி.

இப்படி வீதிதோறும் இரண்டொரு பள்ளிகள் நாடெங்கும் எழுவதற்குத் திருமணக் காலங்களில் செல்வர்கள் பெருந்தொகை கொடையாக வழங்கினால் அவர்கள் பெயர் அழியாது வாழுமன்றோ? அவர்கள் குடும்பம் அதனால் எய்தும் புகழாலும், புண்ணியத்தாலும் வாழையடி வாழையாக வளம் பெறுமன்றோ ?

கல்விக்குத் தருவதைப் போலவே, மருத்துவ மனைகட்கும் கொடையளிப்பது வரவேற்கத் தக்கதே.

அடுத்துத் தமிழ் மக்கள் திருமணம் புரோகிதர் வைத்து நடந்தாலும் சரி—புரோகிதர் வைக்காமல் நடந்தாலும் சரி—வேதவேள்வி முறைப்படி நடந்தாலும் சரி - புது அறிவியல் முறைப்படி நடந்தாலும் சரி—தமிழ் மணங்கமழ நடைபெற வேண்டும். தெய்வ பக்தியோடு தேவாரத் திருவாசகத் திருமுறை இசை முழங்க நடைபெறும் திருமணத்திற்கு இணை உலகில் உண்டோ?

மொழிப்பற்று நம் சமுதாய வாழ்வின் உயிர் நாடி. நம்நாட்டுக் கோயில்களில் உள்ள பரன் - பரைக்கெல்லாம் அமைந்துள்ள தெய்வத் திருப் பெயர்களின் பலவற்றைப் பாருங்கள் ! எவ்வளவு அழகிய தூய தமிழ்ப் பெயர்கள் ! ஐயன் பெயர் மாணிக்க வண்ணர் ! அம்மை பெயர் வண்டுவார்

குழலி ! எனவே, மொழிப்பற்று என்பது தெய்வப் பற்ருேடு ஒன்றி உயர்வதே ஆகும். அதனுலன்ருே குமரகுருபரர் மதுரை மீனுட்சி அம்மையைத் 'தொடுக்குங் கடவுட் பழம் பாடல் தொடையின் பயனே ! நறை பழுத்த துறைத் தீந்தமிழின் ஒழுகு நறுஞ்சுவையே !' என்று பக்திச்சுவை நனிசொட் டப் பாடினுர்.

நம் தாய் நாடாகிய பாரதம் விடுதலை வேட்கை கொள்ள வழிகாட்டிய வரலாறு படைத்த நாடு களுள் ஒன்று இங்கிலாந்தின் அருகிலேயே—அதன் வலப்புறத்திலேயே இருக்கும் அயர்லாந்துத் தீவு ! ஆம். அங்கிருந்து வந்து நம் நாட்டில் 'சுதேசி இயக்கம்' சுடர்விடச் செய்த பெருமாட்டி அன்னி பெசன்ட் அம்மையார் ! அவர் தம் தாய்நாட்டின் தவப் புதல்வராகத் தோன்றிய தியாகச் செம்மலே டோரன்ஸ் மாக்ஸ்வினி. அவர் தம் வாழ்க்கை வரலாறு அவர் கொண்டிருந்த மொழிப்பற்றை— திருமணத்திலும்-தாய்மொழி மணங்கமழ வேண்டு மென்று வைத்திருந்த ஆர்வம்—அதில் அவர் துணைவியாருக்கும் இருந்த பெரும்பங்கு—இவை யெல்லாம் எவ்வளவு தெளிவாய்ப் புலனுகிறது பாருங்கள்.

அயர்லாந்தின் மக்கள் தங்கள் தாய்மொழி யிலேயே பேசவேண்டும் என்பதில் மாக்ஸ்வினி மிகவும் உறுதியானவர். அவர் நாட்டு இளைஞர் பலர் அவரைப் போலவே ஐரிஷ் குடியரசுப் படை யில் சேர்ந்திருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும்

கையில் மோதிரம் அணிந்து கொள்வது வழக்கம். அந்த மோதிரத்தை அணிந்திருப்பவர்கள் ஒருவருக் கொருவர் ஐரிஷ் மொழியிலேயே பேசுவதாகவும், வேற்று மொழியில் பேசுவதில்லை என்றும் சத்தியம் செய்திருக்கவேண்டும். மாக்ஸ்வினி இந்த உறுதி மொழியை மேற்கொண்டவர். பின்னால் அவர் மணந்துகொண்ட மாதரசியும் அந்த விரதத்தை மேற்கொண்டு மோதிரம் வாங்கி அணிந்திருந்தாள். அவர்கள் இருவர் மட்டுமா? அவர்களுடைய பெண் குழந்தை பிறந்த பத்து மாதம் ஆவதற்குள்ளே அதற்கும் ஒரு சிறு மோதிரத்தை அணிவித்தார் கள். அது வளர்ந்து பெரிய பெண்ணாகும்பொழுது தாய்மொழியிலேயே பேசவேண்டும் என்பதற்காக இளமையிலேயே மோதிரம் கைவிரலில் கிடக்கட்டும் என்றுஅந்தப் பெற்றோர்கள்ஆர்வத்துடன் எண்ணி னார்கள்.

மாக்ஸ்வினியின் திருமணமே வியப்பான ஒரு நிகழ்ச்சி. அவர் குடியரசுப் படையில் ஒரு தள கர்த்தராக இருந்தார். அந்தப்படையே சட்டப்பகை யானது. அதில் சேர்ந்த வீரர்களும், அதிகாரி களும் இராணுவ உடையை அணிந்ததற்காகவே பலமுறை சிறை சென்றிருக்கின்றார்கள். *1916*-இல் மட்டும் அவர்இருமுறை சிறையில் தள்ளப்பட்டார். அப்பொழுது ஒருமுறை அரசியல் கைதிகளைப் பார்த்து உதவி செய்வதற்காக வந்த ஒரு பெண் ணரசியைத்தான் அவர் மணந்துகொண்டார். இரு வருக்கும் முதலில் திருமண உடன்பாடு ஏற்பட்டது திருமணம் *9 - 6 - 1917*-ல் சிறையிலேயே நடந்

தது. சிறைக்கூடமே திருமண மண்டபம்! மண மகன் கைதி! மணமகள் வீட்டிலிருந்து வந்து சடங்கு முடிந்ததும் திரும்பிப் போய்விட்டாள்! ஆயினும், திருமணம் சிறப்பாக நடந்ததாகவே திருமணப் பெண்ணின் எண்ணம். ஏனென்றால், ஐரிஷ் பாதிரியார் ஒருவர், ஐரிஷ் மொழியிலேயே திருமணச் சடங்கை நிறைவேற்றியதாக அந்த அம்மையார் பிற்காலத்தில் எக்களிப்போடு பேசினார்!

அயர்நாட்டு வீர மணமக்களின் மொழிப்பற்று நமக்கும் வேண்டாமோ?

### மணையறமும் தமிழ் மறையும்

இனி, தமிழ்நாட்டுத் திருமண மக்கள் தவறாது மேற்கொள்ள வேண்டிய கட்டுப்பாடு ஒன்றுண்டு. அது பொதுமறையும் தமிழ் மறையுமாகிய திருக் குறள் வழி நின்று வாழ்வு நடாத்த உறுதிகொள்ள வேண்டும் என்பதே. வையகம் முழுவதற்கும் - வாழ்க்கை முழுவதற்கும் பயன் தரத்தக்க ஒரே நூல் தெய்வப் புலவர் நம் தாய்மொழியில் தந்த திருக்குறளே ஆகும். எவரொருவர் உள்ளத்தில் அத் தெய்வத் திருநூலில் உள்ள ஒவ்வொரு திருக் குறள் மணியும் நிலையமாக நின்று ஒளிவீசிக் கொண்டிருக்கிறதோ அவர்க்கு எல்லா நலன்களும் இம்மையிலும் மறுமையிலும் எளிதில் வாய்க்கும்; அன்பு பெருகும்; அறிவு பெருகும்; கல்வி பெருகும்; கேள்வி பெருகும்; செல்வம் பெருகும்; புகழ் பெருகும்; கடவுள் அருளும் பெருகும்.

இத்தகு சிறப்புவாய்ந்த அத்தித்திக்கும் திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் முப்பால் உடையது. அம்முப்பாலுள் முதற்பாலாக இருப்பது அறத்துப்பால். அவ்வறத்துப்பாலுள் முதல் நான்கு அதிகாரங்கள் பாயிரம். பாயிரம் என்ருல் முகவுரை என்று பொருள். முகவுரை முடிந்ததும் நூல் தொடங்குகிறது. எவ்வாறு தொடங்குகிறது? எந்த அதிகாரங்களைக் கொண்டு தொடங்குகிறது? இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு என்ற மூன்று அதிகாரங்களைக் கொண்டு தொடங்குகிறது.

ஆம். தெய்வப் புலவர் திருவள்ளுவரின் பொய்யாமொழிக்கு ஆதியாய் அமைந்த மூன்று அதிகாரங்கள் இலவாழ்க்கையும் வாழ்க்கைத் துணைநலமும், மக்கட்பேறும்! என்னே மனைமாட்சியின் மாட்சி! என்னே இல்லறமே நல்லறமாம் மாண்பு!

இனி இந்த மூன்று அதிகாரத்தில் ஒவ்வொரு அதிகாரத்தில் இருந்தும் ஒரு குறளை மட்டுமேனும் ஈண்டு நினைவுபடுத்தி மகிழ்வோம்.

இல்வாழ்க்கை என்ற அதிகாரத்துள் ஐந்தாவதாக—நடுநாயகமாக விளங்கும் அருமைப்பாடுடைய ஒரு திருக்குறள் உண்டு. அது,

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது. (45)**

என்னும் அருமைத் திருக்குறள். மனைவாழ்க்கைக்கு இரு விழிகள் உண்டு. ஒன்று அன்பு ; மற்றொன்று அறம். அன்பே வாழ்க்கையின் பண்பு ; அறமே வாழ்க்கையின் பயன். எந்த ஒரு பொருளும் மதிக்கப் பெறுவது அது பண்புடையதாய் இருப்பதாலும் பயனுடையதாய் இருப்பதாலுமே ஆகும். இரண்டில் ஒன்றிருந்து மற்றொன்று இல்லையானாலும்கூடப் பயனில்லை. எனவே, இரண்டும் வேண்டும்—அன்பே பண்பாக, அறிவே பயனாக.

இத் திருக்குறளுக்குப் பேராசிரியர் டாக்டர் மு.வ. அவர்கள் தெளிவுரை வருமாறு :

' இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால் அந்த வாழ்க்கையில் பண்பும் பயனும் அதுவே ஆகும்.'

இத் திருக்குறள் நம் மணமக்களின் இரு விழிகளாய் இலங்குமாக !

அடுத்து, ' வாழ்க்கைத்துணை நலம் ' என்ற அதிகாரம். இவ்வதிகாரத்திற்குத் தலைமை தாங்கும் முதற் குறள் ஒன்று உண்டு. அது,

> **மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்**
> **வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. (51)**

என்பது.

இவ்வருமைத் திருக்குறள் ' மனைக்கு விளக்கு ' என்று சங்ககாலச் சான்றோர்கள் போற்றிப் புகழும் குடும்பத் தலைவி-வீட்டுத் திருமகள்-இலக்கணத்தை

எடுத்து இயம்புவது. வீட்டரசி - வாழ்வரசி மனை வாழ்க்கைக்கு ஏற்ற பண்புடையவளாய் இருத்தல் வேண்டும். சிறப்பாகத் தன் கணவன் வருவாய் அறிந்து வாழ்க்கை நடத்த வேண்டும். அதுவே, மணமகள் மனையறம் ஏற்குமுன் கொள்ளவேண்டிய முதல் உறுதிப்பாடு.

இத் திருக்குறளுக்குப் பேராசிரியர் டாக்டர் மு. வ. அவர்களின் தெளிவுரை வருமாறு:

'இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்பு உடைய வளாகித் தன் கணவனுடைய வருவாய்க்குத் தக்க வாழ்க்கை நடத்துகிறவளே வாழ்க்கைத் துணை ஆவாள்.'

அடுத்து, 'மக்கட் பேறு' என்ற அதிகாரம். இதில் எட்டாவது குறளாக இலங்கும் பெருமை படைத்த திருக்குறள்,

> **தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
> **மன்னுயிர்க் கெல்லாம் இனிது. (68)**

என்பது.

பெருமை சான்ற இத் திருக்குறள் குடும்ப வாழ்க்கையின் குறிக்கோளை எடுத்துரைக்கிறது. ஆம். வீடு நாட்டிற்காக — நாடு வீட்டிற்காக என்பது திருவள்ளுவரின் தெளிந்த கோட்பாடு. மனைமாட்சி மங்கலம் நிறைந்தது அதற்கு அணி கலனுய் விளங்குவது நன்மக்கட்பேறு. வெறும் மக்களைப் பெறுவது பேறு ஆகாது. நன்மக்களைப் பெறுவதே பேறு. அப்பேறு பெற்றவர்க்கு மட்டும்

பெருமை தருவதன்று. பெற்றவரையும் பெற்ற பேருலகிற்கே பெருமை தருவது. அதுவும் பெற்றோரைக் காட்டிலும் பிள்ளைகள் சிறந்தவராயின் அது உலகிற்கு எல்லாம் உவப்பு தருவது.

உயர்ந்த இத் திருக்குறளுக்குப் பேராசிரியர் டாக்டர் மு. வ. அவர்களின் தெளிவுரை வருமாறு:

'தம் மக்களின் அறிவுடைமை, தமக்கு இன்பம் பயப்பதைவிட உலகத்து உயிர்களுக்கு எல்லாம் மிகுந்த இன்பம் பயப்பதாகும்.'

வாழ்க திருமண மக்கள்!

வாழ்க மனைமாட்சி!

வாழ்க வையகம்!

*(குறிப்பு: வாலாஜாபாத் இந்துமத பாடசாலை 'அப்பா திரு வா. தி. மாசிலாமணி அவர்கள் விருப்பத்திற் கிணங்க எழுதப்பட்டு 'குருகுலம்' 3—7—1964 இதழில் வெளியிடப்பட்ட கட்டுரை.)*

# தமிழர் திருமண முறைகள்

## பழமையும் புதுமையும்

டாக்டர் ந. சஞ்சீவி

(1)

தொன்மை வாய்ந்த மக்கள் இனங்களுள் ஒன்று தமிழினம். சமுதாய வாழ்க்கை முறைகளும் வளமும் வலிமையும் வாய்ந்த ஒன்று திருமணம். எனவே தமிழினத்தில் திருமண முறைகள் காலந்தோறும் உற்ற மாறுதல்களை ஆராய்வது ஒளியும் உணர்வும் தருவதாகும்.

'திருமண முறைகள் — அன்றும் இன்றும்' என்னும் சுவை பயக்கும் இத்தலைப்பில் பலரும் கருத்து விருந்து வழங்குவதையே யான் பெரிதும் விரும்புகிறேன். எனவே என் கட்டுரையை ஒரு தூண்டுகோல் கட்டுரையாகவே கொள்ள வேண்டுகிறேன். இக்கட்டுரையிலும் இக்கட்டுரைக்குரிய பொருளே ஆராய்ச்சிக்குரியது.

எனவே (1) இக்கட்டுரையில் திருமணத்திற்கு முன் - பின் செய்திகள் பெரிதும் பேசப்படா. ஒரோவழி ஓதக்கூடிய குறிப்புகளும் இன்றியமையாமை பற்றியே இருக்கும்.

2. திருமணம் நல்லதா கெட்டதா என்பதும் திருமணம் தேவையா இல்லையா என்பதும் ஒரு திருமண முறையினும் மற்றொரு திருமண முறை உயர்ந்ததா தாழ்ந்ததா என்பதும் உறுதியாக இன்று இங்கே ஆய்வுக்கு இல்லை.

மேலும் அன்றும் இன்றும் திருமணத்திற்குரிய நிபந்தனைகள் பற்றியும் திருமணத்திற்கு முன்னும் பின்னும் அமையும் நிகழ்ச்சிகள் குறித்தும் இன்றைய ஆய்வு இல்லை.

(2)

இனி, முதற்கண் திருமணம் என்ற ஒரு பொருள் சுட்டும் பல்மொழிகள் எவை எனக் காண்போம். அவற்றின் அகரவரிசை (1) கடி; (2)மணம்; (3) மன்றல்; (4) வதுவை; (5) வரைவு என்பதாகும். இவற்றுள் தொல்காப்பியம் முதலாகப் பதினெண் கீழ்க்கணக்கு ஈருக உள்ள மேல் கீழ்க்கணக்கு நூல்களுள் 12 இடங்களில் மணமும் 10 இடங்களில் வதுவையும் 6 இடங்களில் மன்றலும் 4 இடங்களில் வரைவும் வருகின்றன. இவற்றுள் மண்ணுதலாகிய (நீராடுதலாகிய) சிறப்பால் மணமும் மன்றில் நடைபெறும் மாட்சியால் மன்றலும் வரையறை (எல்லை) செய்வதால் வரைவும் அமைந்தன எனலாம்.

தொல்காப்பியர் உரிச்சொல்லாக உணர்த்தும் 'கடி' என்னும் சொல்லுக்குப் பல பொருள்களும் கூறுகிருர். அவற்றுள் 'நீக்குதல்', 'காப்பு' என்னும்

பொருள்களோடு பிற்காலத்தே 'மணம்' என்னும் பொருளும் சேர்ந்திருக்கக் கூடும்.

வதுவை வடசொல் என்பர். அவ்வாருயின் திருமணத்திற்குரிய சொற்களுள் ஒன்ருகத் தொல்காப்பியத்துள்ளும் அது பயின்றது ஏன் ? என்பது ஆராய் தற்குரியது. வதிதல் என்பதோடு தொடர்புடைய தாகக் கருதி 'வதுவை' என்னும் சொல்லைத் தமிழ்ச் சொல்லாகவே கொள்ளலாம்.

கடியும், மணமும் தொல்காப்பியத்துள் திருமணம் என்னும் பொருள் பொருந்தாமை எண்ணற் குரியது.

(3)

பழந்தமிழர் வாழ்வில் 'குழந்தைத் திருமணம்' இடம் பெறவில்லை எனலாம். ஆனுல் அவ்வகைத் திருமணம் பற்றிய செய்திகள் மனுஸ்மிருதியி லேயே காணப்படுகின்றன. தொல்காப்பியம் திருமணம் பற்றிக் குறிப்பிடுகிறதே அன்றி திருமணச் சடங்குபற்றி ஏதும் விரிவாகக் குறிப்பிடு வதாகத் தெரியவில்லை. ஆயினும் கற்பியலில் வரும் கரணத்தின் சிறப்பை மறக்கவோ மறைக் கவோ முடியாது. கரணம் பற்றிக் கற்பியலின் முதல் ஐந்து நூற்பாக்களும் வலியுறுத்துகின்றன. அவற்றுள் ஒன்று :

> **பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
> **ஐயர் யாத்தனர் கரணம் என்ப**

இந்நூற்பாவால் தொல்காப்பியருக்கு முன்பே 'கரணம்' காலூன்றியமை விளங்கும். ஆயினும், இக்கரணம் யாது என்பதுபற்றி அறுதியிட்டு உறுதியாகக் கூறமுடியும் என்று தோன்றவில்லை. இதுபற்றிப் பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் கருத்து வருமாறு: 'கரணம் என்பது திருமண அடையாளம்; பெண்ணொருத்தி, கன்னிமை கழிந்து மனைவிமை புக்காள் என்பதனைக் காட்டும் மனையணி என்பது என் துணிபு.'

*(தமிழ்க் காதல்—பக். 154)*

'மணந்த குமரியரை மணவாக் குமரியரினின்றும் வேறுபடுத்திக் காட்டும் நோக்கமே கரணத் தோற்றத்திற்குக் காரணம் ஆகும். காலிற்கிடந்த சிலம்பை அகற்றுவது ஒரு கரணம்; கூந்தல் மேல் மலரணிவது ஒரு கரணம். இவ்விரண்டும் பண்டைத் திருமணக் காலத்துப் பரவலாக வழக்கில் இருந்த கரணங்கள் என்று தெளிகின்றோம். இவள் மனைவியானாள் என்ற அறநிலையைச் சிலம்பு கழித்த அடியாலும் மலர்வேய்ந்த முடியாலும் அறிந்து கொள்ளலாம்.'

*(தமிழ்க் காதல்—பக். 165)*

மணமான மங்கையரே மலர்வேய்வர் என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது.

ஈண்டு பேராசிரியர் இலக்குவனார் இயம்பும் இன்னொரு வகை விளக்கமும் எண்ணுதற்குரியது. அது இது:

'கரணம்' என்ற சொல்லுக்கு இன்னொரு பொருளும் கொள்ளலாம். இக்காலத்தும் கரணம் என்று சொல்லப்படுபவர்கள் ஊர்க்கணக்கு எழுதும் கணக்கப்பிள்ளைகள் ஆவார். கரணம், கணக்கு எழுதுவோரைச் குறிப்பதால், எழுதுதலையும் குறிப்பதாகும். ஆதலின் இன்ன ஆடவனுக்கு இன்ன பெண் மனைவி என்று எழுதிக் கொள்ளும் பழக்கமும் இருந்திருக்கலாமன்றோ ? அவ்வாறு எழுதுதலையே ஆசிரியர் தொல்காப்பியர் கரணம் என்று குறித்திருக்கலாமன்றோ? இன்றும் பழங்கால முறைப்படி திருமணம் கொள்வோர், திருமணத்துக்கு முன்னால் மணமகள் வீட்டாரும் மணமகன் வீட்டாரும் மணமகள் வீட்டில் கூடி இவ்வாறு எழுதி உறுதிப்படுத்திக் கொள்வதைக் காணலாம். இந்நிகழ்ச்சியை 'மணவோலை எழுதுதல்' என்றும், 'நிச்சயதார்த்தம்' என்றும், 'வெற்றிலைப் பாக்கு மாற்றுதல்' என்றும் அழைப்பர். தொல்காப்பியர் காலத்து வழக்கமே இன்றும் தொடர்ந்து வந்துள்ளது என்று கொண்டால் குற்றம் என்னை ? இப்பழக்கமே பதிவு முறையாகவளர்ச்சிபெற்றுள்ளது.'

*(டாக்டர் சி. இலக்குவனார்—தொல்காப்பிய ஆராய்ச்சி—பக். 179)*

(4)

இனி, பழந்தமிழ் இளையோர் பெரிதும் முதற்கண் பெற்றோர் அறியா நிலையிலேயே காதல் வாழ்வில் கலந்தனர் என்பது வெள்ளிடைமலை. இந்நிலையில் ஏற்பட்ட பெரு மாற்றத்தை முழங்கு

வது சிலம்பே எனலாம். இத்தலைக் காப்பியத் துள்ளேயே பெற்றோர் பார்த்துச் செய்யும் திருமணம் தெளிவுறத் தென்படுகிறது; சாதிவழித் திருமணமும் சாற்றப்படுகிறது; மாமுது பார்ப்பான் மறைவழிகாட்ட நடைபெறும் மணமும் காட்சி அளிக்கிறது. (தொகை நூல்களுள் பிற்காலத்த தாய்க் கருதப்படும் கலித்தொகையுள்ளேயும் இக் காட்சி வருகிறது. கலி. 69:3-7). எல்லாவற்றிற்கும் மேலாகச் சிலப்பதிகாரக் கண்ணகி சிலம்புகழி நோன்பை மேற்கொண்டவள் அல்லள் என்பதும் விளங்குகிறது. அதற்கு ஒரு பெருஞ்சான்று திருமணமான பின் கணவனைப் பிரிந்த கண்ணகி 'அஞ்செஞ்சீறடி அணிசிலம்பொழிய' (சிலம்பு-4:37) அல்லற்பட்டாள் என்பதால் அறியலாகும்.

பழந்தமிழ் நாட்டில் நால் வருணமும் குடிப் பாகுபாடுகளும் இருந்திருக்கக் கூடுமாயினும் (புறம்) இடைக்காலத்தும்—ஏன் — இக்காலத்தும் இருக்கும்–'சாதி'க் கடுமையும் கொடுமையும் இல்லை? அது திருமணச் சிக்கல்களுள் ஒன்றாக அமைய வில்லை என்றும் துணிந்து கூறலாம். சாதிக் கொடுமை பற்றி முதன்முதலாக அறியும் வாய்ப்பை 'மணிமேகலை'யே வழங்குகிறது எனலாம் 'ஆபுத்திரன் கதை' அறிந்தார் இவ்வுண்மை அறிவார்.

(5)

இனி, இந்த ஒப்பாய்வு நிலையிலிருந்து ஒரு சிறிது விலகி சங்ககாலத் திருமண விழாக்கள்

எவ்வாறு நடந்தன என்பதைப் பார்த்து—இல்லை—படித்து முடித்து விடுவோம்.

தொகை நூல்கள் வாயிலாகப் பழந்தமிழர் திருமண விழாவை அறியத் துணை புரியும் பாடல்கள் இரண்டே ஆகும். அவை அகம் 86, 136. இவற்றுள் 86-ஆம் பாடலால் அறியவல்ல செய்திகள் வருமாறு:

1. மணத்தில் முதல் நிகழ்ச்சியாக விருந்து நடைபெற்றது. (இப்போதும் பொங்கலும் வடையும் உண்டு.)

2. மணப்பந்தலின்கீழ் மணல் பரப்பப்பெற்று விளக்கு வைக்கப்பட்டது. (இப்போதும் விளக்கு வைத்தல் உண்டு.)

3. இளங்காலை நேரத்தில் திங்கள்உரோகிணியுடன் கூடிய நல்லோரையில் முதுபெண்டிர் மணமகளை, நீராட்டுதற்குரிய நீரைக் குடங்களில் ஏந்தி வந்தனர். (இப்போதும் நீராட்டு உண்டு. ஆனால் முதுமகளிர் நீர் கொண்டு வரும் வழக்கம் இருப்பதாகத் தெரியவில்லை.)

4. அந்நீர்க் குடங்களில் மலரும் நெல்லும் தூவிப் பிள்ளைபெற்ற வாழ்வரசிரியர் நால்வர் மணமகளை "கற்பு நெறியினின்றும் வழுவாமல் பல நலங்களைச்செய்து கணவன் விரும்பத்தக்க மனைவி ஆகுக" என்று வாழ்த்தி மண நீராட்டினர். இவற்றுடன் "வதுவை நன்மணம்" கழிந்தது.

இனி அகம் 136 அறிவிக்கும் செய்திகளைக் காண்போம்:

1. இறைச்சி கலந்து ஆக்கப்பட்ட வெண் சோற்று விருந்து நடைபெற்றது. (இப்போது திருமணங்களில் புலால் உணவு இல்லை.)

2. திங்கள் உரோகிணியைக் கூடிய நல்லோ ரையில், மணமனை அணிசெய்யப்பட்டுக் கடவுள் வழிபாடு நடைபெற்றது. (இப்போதும் இவ்வழக் கம் உண்டு.)

3. மணமுழவும் முரசமும் முழங்கின. (இப் போதும் முழவுக்குப் பதில் மேளம் - நாதசுவரம்.)

4. தலைவிக்கு மணநீராட்டு நடைபெற்றது. இது இப்போதும் உண்டு.)

5. வாகையிலை அறுகின் கிழங்கிலுள்ள அரும்புகளோடு சேர்த்துக் கட்டப்பெற்ற வெண் ணூல் தலைவிக்குக் காப்பாகச் சூட்டப்பட்டது. (இப்போதும் ஒரு வகையில் காப்புக்கட்டும் சடங்கு உண்டு.)

6. தமர் தலைவிக்குத் தூய உடைகளை அணி வித்தனர். (இது இப்போதும் உண்டு.)

7. தமர் தலைவிக்குப் பல அணிகளை அணி வித்து, அங்ஙனம் அணிவித்ததால் உண்டான வியர்வையை ஆற்றினர்.

நல்லாவூர் கிழார், விற்றூற்று மூதெயினனார் ஆகிய இருவேறு பார்ப்பனர் அல்லாப் புலவர்

களால் பாடப்பட்ட இவ்விரு பாடல்களும் பற்றிய இரு பொதுக் குறிப்புகள் :

1. இரு பாடல்களும் அகநானூற்றின.

2 இரு பாடல்களும் மருதத்திணையின.

இனி, இப்பாடல்கள் புகலும் பொதுச் செய்திகள்.

1. திருமணத்தின் முதல் நிகழ்ச்சி விருந்து.*

2. திருமணம் திங்கள் உரோகிணியைக் கூடிய நல்லோரையில் நடைபெற்றது.*

3. தலைவிக்கு மணநீராட்டு நடைபெற்றது.*

இனி, அகம் 86-இல் அறியப்படும் சிறப்புச் செய்திகள் வருமாறு :

1. மணப்பந்தலின்கீழ் மணல் பரப்பப்பெற்று விளக்கு வைக்கப்பட்டது. (இப்போதும் புதுமணல் பரப்பலும் விளக்கு வைத்தலும் உண்டு.)

2, (இளங்காலை போதில், திங்கள் உரோகினியுடன் கூடிய நல்லோரையில்) முதுபெண்டிர் மணமகளை நீராட்டுதற்குரிய நீரைக் குடங்களில் ஏந்தி வந்தனர்.

3. அந்நீர்க்குடங்களில் மலரும் நெல்லும் தூவிப் பிள்ளைபெற்ற வாழ்வரசியர் நால்வர் (இந்த இரட்டைப்படை எண் கருதற்குரியது) மணமகளை, "கற்பு நெறியினின்றும் வழுவாமல் பல நலன்களைச்

செய்து கணவன் விரும்பத் தக்க மனைவி ஆகுக'" என்று வாழ்த்தி (மணநீராட்டினர்).

அகம்—136 அறிவிக்கும் சிறப்புச் செய்திகள் வருமாறு :

1. இறைச்சி கலந்து ஆக்கப்பட்ட வெண் சோற்று (விருந்து நடைபெற்றது). (இவ்வழக்கம் பெரிதும் இப்போது இல்லை.)

2. மணமனை அணி செய்யப்பட்டு இறைவழி பாடு நடைபெற்றது.*

3. மணமுழவும் முரசும் முழங்கின.*

4. வாகையிலை அறுகின் கிழங்கிலுள்ள அரும்புகளோடு சேர்த்துக் கட்டப்பெற்ற வெண் ணூல் தலைவிக்குக் காப்பாகச் சூட்டப்பட்டது.*

5. சுற்றத்தார் தலைவிக்குத் தூய உடைகளை அணிவித்தனர்.*

6. உறவினர் தலைவிக்குப் பல அணிகளை அணிவித்து, அங்ஙனம் அணிவித்ததால் உண் டான வியர்வையை ஆற்றினர்,*

(*இப்போதும் இவ்வழக்குகள் உண்டு.)

இப்பாடல்கள் தரும் செய்திகளுள் இக்காலத் திற்கும் பொருந்தும் எண்ணங்கள் சில வருமாறு :

1. இப்போதும் திருமணக் கோயில் விழாக் களில் புதுமணல் பரப்பப் பெருகின்றன.

2. திருமண விழாவில் விளக்குகள் ஏற்றப் படுகின்றன; மலரணி செய்யப்படுகிறது.

3. நல்லோரையில் திருமணம் நடைபெறும் மரபு நீடிக்கிறது.

4. திருமணத்திற்கு இளங்காலைபோது ஏற்ற போதாய்க் கருதப்படுகிறது.

5. மணமகள் புத்தாடை உடுத்தல்.

6. மணவிழாவிற்கு வந்தோர்க்கு விருந்து செய்தல்.

7. மணமனையை அழகுபடுத்தி கடவுள் வழி பாடு செய்தல்.

8. காப்பு கட்டல்.

9. மணமகளுக்கு மிகுந்த அணிகள் அணி வித்தல்.

10. திருமணநாள் இரவிலேயே தலைமக்கள் கூடல்.

பழந்தமிழ்த் திருமணங்களில் தலைவன் பெற்ற சிறப்புகள் குறித்து ஏதும் அறிய இயலாமல் இருப் பது ஆடவர் வருந்தற்குரியது.

அகநானூற்றுப் பாடல்கள் தரும் செய்திகளுள் ஆராயத் தக்கன :

1. மாமுது பார்ப்பான் மறைவழி காட்ட எரியோம்பித் தீவலம் செய்யாமை.

2. தாலி கட்டல் இல்லை.

3. திருமண நாளன்றும் இறைச்சிசோறு விருந்தாக அமைந்தது.

இம்மூன்றனுள்ளும் முதலாவது தமிழர் சமுதாயத்தில் வைதீகத்தின் தாக்குதலைப் புலப்படுத்தும். இதுபற்றிய முதற் குறிப்புகள் சங்கநூல்களுள் காலத்தால் பிற்பட்டதாய்க் கருதப்படும் கலித்தொகையுள்ளும் சிலப்பதிகாரத்துள்ளும் காணப்படுகின்றன.

இனி, தாலி பற்றிக் கூர்த்த கருத்து வேறுபாடுகள் உண்டு. இது பற்றி டாக்டர் இராசமாணிக்கனார் 'தமிழர் திருமணத்தில் தாலி' என்று ஓர் ஆய்வு நூலே ஆக்கியுள்ளார். அதில் தமிழர் வாழ்வில் 'தாலி' 10-ஆம் நூற்றாண்டில்தான் வந்தது என்று முடிவு கட்டியுள்ளார். சிலம்புச் செல்வர் தலைவர் ம.பொ.சி. அவர்கள் தமது 'செங்கோலில்' சங்ககாலத்திலேயே 'தாலி' உண்டு என்று வாதிட்டுள்ளார்.

என்னைப் பொறுத்தவரையில் தொகைநூல்களில் திருமணத் தாலி பற்றிய குறிப்பு ஏதும் இல்லை. 'ஈகை அரிய இழை அணி மகளிரொடு' என்று வரும் புறநானூற்றுத் தொடரில் (புறம் - 127) 'ஈகை அரிய என்ற சொற்கள் இழையிலும் இழையணிந்த மகளிரையே சாரும் என்பது என் புதுக் கருத்து. அவ்வாறு பொருள் செய்யின் 'கொடையாகவும் கொடுத்தற்கரிய பெண்கள்' என்ற பொருள் பொலியும்.

இனி, சிலம்புள்வரும் 'மங்கல அணி' எதுவென உரையாசிரியருக்குள்ளேயே குழப்பம் உள்ளது. 'மாங்கல்ய சூத்திரமாகவும் இருக்கலாம்' என்னும் உரையாசிரியரும் அக்கருத்தில் உறுதியாக இல்லாமல் 'இயற்கை அழகாகவும் இருக்கலாம்' என்று எண்ணுகிறார். மேலும் திருமணம் கொண்டபோதும் கணவனை இழந்து பொற்றொடி அணி உடைத்தபோதும் கண்ணகியின் கழுத்தில் 'மங்கல அணி' பற்றிய குறிப்பு ஏதுமில்லை. எனவே சிலம்பின் துணைகொண்டு 'தாலி' இருந்தது என உறுதிகூற முடியாது என்றே தோன்றுகிறது.

இனி, இத்தாலி பற்றி யான் கூறத்தக்க புதிய செய்தி டாக்டர் மா. இராசமாணிக்கனார் முடிவு கட்டியதுபோல் இல்லாமல் எட்டாம் நூற்றாண்டிற்கு முன்பே 'தாலி' தமிழர் திருமணத்தில் ஒரோவழியேனும் இடம் பெற்றிருக்க வேண்டும் என்பதே. காரணம் திருமங்கை மன்னன் திவ்யப்பிரபந்தப் பாடல் ஒன்றே ஆகும். அது வருமாறு :

அந்தகன் சிறுவ னரசர்த மரசற்
கிளையவ னணியிழை யைச்சென்று,
'எந்தமக் குரிமை செய்' எனத் தரியாது
'எம்பெரு மானருள் !' என்ன,
சந்தமல் குழலாள் அலக்கண்நூற் றுவர்தம்
பெண்டிரு மெய்திநூ லிழப்ப,
இந்திரன் சிறுவன் தேர்முன்நின் றானைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே.

—பெரியதிருமொழி—2-3-6.

(இப்பாடல் டாக்டர் மா. ரா. பார்வையில் படாமை வியப்பிற்குரியது.)

இப்பாடலுள் Anacronism என்னும் காலக் கருத்து வழு இருப்பினும் திருமங்கையார் காலத்தில் மணமானமைக்கு அறிகுறியாகக் கழுத்தில் (பின்னுளில் தாலியாகவும் பெயர் பெற்ற) நூல் அணியப்பெற்றமை வழக்கத்திற்கு வந்துவிட்டது என்பது வாய்மையாகும். திருமங்கை மன்னன் வழிப்பறி பற்றிய கதையிலும் தாலி வருவது நினைவுகூரத்தக்கது. இக்காலத்தும் தாலியை 'நூல்' என்றும் 'கயிறு' என்றும் குறிக்கும் வழக்கு உண்டு.

ஈண்டு மானிடவியல் அறிஞர் திரு. டி. ஜே. ஜெய தேவ் அவர்கள் 'தாலி' பற்றி ஆங்கிலத்தில் எழுதியுள்ள கட்டுரையும் குறிப்பிடத்தக்கது.

சங்க நூல்களிலும் இடைக்கால நூல்களிலும் அருங்கலம்' என்ற ஒரு தொடர் வருகிறது. 'முலைவிலை' (களவியல் உரை – தஞ்சைவாணன் கோவை) என்ற தொடரும் இடைக்கால நூல்களில் இடம் பெறுகின்றன. இவை மானிடவியல் நூலார் குறிக்கும் Bride-Price 'பரிசம்' எனலாம். 'அருங் கலம்' என்பதும் தாலி ஆகாது என்பது தெளிவு. இப்போதும் திருமணத்தின்போது மாப்பிள்ளை வீட்டார் மணமகளுக்கு ஏதேனும் ஒரு சிறப்பணி அணிவித்தல் பெருவழக்காய் இருத்தல் கருதத் தக்கது.

சிலப்பதிகாரத் திருமணத்தால் நமக்குத் தெரியும் சிறந்த செய்தி மணமகன் வயது 16 மணமகள் வயது 12 ஆக இருந்தது என்பதே ஆகும்.

இனி, கி. பி. 7 அல்லது 8-ஆம் நூற்றுண்டின தாய்க் கருதப்படும் பெருங்கதையுள் வாசவதத்தையின் திருமணத்தில் (1) எரி வளர்த்தல் (2) அம்மி மிதித்தல் (3) பொரி கட்டுதல் (4) முன்கை பற்றி வலம் வருதல் (5) அந்தணர் ஆசி கூறுதல் (6) அருந்ததி காட்டுதல் (7) பெரியோர் வாழ்த்தல் ஆகியன கூறப்பட்டுள்ளன.

பெருங்கதைக்குப் பின்னுல் திருமணச் சடங்குகளைப் பற்றிய விரிவான விவரங்களைக் கூறுவது கி. பி. 8-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த ஆண்டாளின் அருள்வாக்கே. அவர்தம் நாச்சியார் திருமொழியால் அறியத்தக்க குறிப்புகள் வருமாறு :

1. இந்திரன் உள்ளிட்ட தேவர்கள் வந்து மகள் பேசுதல்.

2. மணமகள் புத்தாடை உடுத்தல்.*

3. திருமாலின் தங்கையான சுந்தரி (துர்க்கை) மணமகளுக்கு மணமாலை சூட்டல்.*

4. மணமகளுக்குக் காப்புநாண் கட்டுதல்.*

5. மணமகள் மணப்பந்தலுக்கு வருதல்.*

6. இசைக்கருவிகள் முழங்கக் கண்ணன் ஆண்டாள் கையைப் பிடித்தல். (இதுவே திருமணத்திற்கு அறிகுறியாயிற்று எனலாம்.)

7. வேதியர் மந்திரம் ஓதக் கண்ணன் ஆண்டாள் கையைப் பற்றித் தீவலம் செய்தல்.

8. கண்ணன் தனது திருக்கையால் ஆண்டாள் பாதத்தை அம்மிமேல் வைத்தல்.

9. ஆண்டாளின் உடன்பிறந்தார் கண்ணன் கை மேல் ஆண்டாளின் கையை வைத்துப் பொரி முகந்து அட்டுதல்.

10. குங்குமம் அப்பிச் சாந்து பூசி மங்கல வீதி வலம் செய்வித்து மணமக்கள் இருவரையும் மஞ்சனம் ஆட்டல். (இவ்வழக்கம் இப்போது எங்கேனும் உண்டா? இப்போதும் நீராட்டு மட்டும் உண்டு.)

11. மாப்பிள்ளை தன் மைத்துனருக்கு மோதிரம் அணிவித்தல்.

(* இவ்வழக்கங்கள் இப்போதும் உண்டு.)

இவ்வளவு விரிவான சடங்குப் பட்டியலில் 'தாலி கட்டல்' இல்லை! இந்நிலையையும் திருமங்கை மன்னன் பாடற்குறிப்பையும் ஒப்பு நோக்கும் போது கி. பி. 8-ஆம் நூற்றுண்டில் 'தாலி' கட்டும் வழக்கம் ஆங்காங்கே நுழைந்திருக்கும்—எல்லோரும் ஏற்கும் சடங்காய் ஏற்றம் பெற்றிராது என்று எண்ணத் தோன்றுகிறது.

கி.பி. 9-ஆம் நூற்றுண்டினதாகக் கருதப்படும் சூளாமணியிலும் 1. பெண்ணின் தந்தை மணமகளை மணமகனுக்குத் தாரைவார்த்துக் கொடுத்தல்,* 2. எரி வளர்த்தல்,* 3. மணமக்கள் தீ வலம் வருதல்,* 4. அம்மி மிதித்து அருந்ததி காட்டல்,* ஆகிய சடங்குகள் கூறப்படுகின்றன.

(*இவ்வழக்கங்கள் இப்போதும் உண்டு.)

பெண்ணை மணமகனுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கும் செய்தி முதன்முதலாக இந்நூலுள்ளேயே நுழைந்துள்ளது எனலாம்.

இனி, அரச குடியைச் சார்ந்த ஒருவன் புரியும் ஒன்பது திருமணங்களுள் சிலவற்றுள் கலப்புத் திருமணங்களும் உண்டு. அவற்றை ஒன்றன்பின் ஒன்ருக உரைக்கும் சிந்தாமணியால் தெரியவரும் செய்திகளை அந்நூலுள் உள்ள முறைப்படிப் பார்ப்போம். அவை வருமாறு:

1. மணமகளை நீராட்டுதல்,* 2. அவள் முன்னர் அணிந்திருந்த பசும்பொன் தோட்டையும் மணிகள் பதித்த குழையையும் நீக்கிவிட்டு அவளுக்குமங் கலக்கடிப்பு (கடிப்பு - காதணி) அணிவித்தல், (இப்போது புத்தணிகள் அணிவித்தல் மட்டும் உண்டு.) 3. மலர்மாலை அணிவித்தல்,* 4. இவ்வாறு மணமகளுக்குக் கோலம்செய்த பின்னர் அவள் தந்தை தாரைவார்த்தல்-மணமகன் ஏற்றல்,* 6. மணமகன் மணமகளின் முன்கையைப்பற்றித் தீ வலம் வரல்,* 7. திருமணத்திற்கு நல்ல நாள் பார்த்தல்.* 8. திருமணநாளில் முரசு, முழவு, சங்கம் முழங்க மணமகன் மணமகளை மணத்தல்,* 9. மணமகள் முன்கையில் காப்புக் கட்டுதல்.* 10. மணமக்களுக்குக் கோலம் செய்வித்தல் 11. வதுவை நன்னுளை அனைவர்க்கும் கூறல்.* 12. மணமகன் மணமகள் இடக்கையைப்பற்றித் தீ வலம் வரல்.* 13. அருந்ததி காட்டல்

( இவ்வழக்கங்கள் இப்போதும் உண்டு. )

இனி, 11-ஆம் நூற்றுண்டுக் கச்சியப்ப சிவாச்சாரியார் செய்த கந்தபுராணத்துள் வரும் புதுக் குறிப்புகள் வருமாறு :

1. மணமகளாகிய உமையின் தாய் நீர் வார்க்கத் தந்தையான இமவான் மணமகனை சிவபெருமான் திருவடிகளை விளக்கினுன், (இவ்வழக்கம் இப்பொழுது பிராமணர்களிடம் உள்ளது என்பர்.) 2. பின் உமையின் கையை மணமகன் கையில் வைத்துத் தாரைவார்த்துக் கொடுத்தான்.* 3. குறவர் கோமான் முருகன் கையில் வள்ளியின் கையை வைத்து, தாரைவார்த்துத் தந்தார்,* 4. நாரதர் புரோகிதராகவந்து வேத விதிப்படி எரிவளர்த்துச் சடங்குகள் செய்தார். 5. தெய்வயானையின் தந்தை இந்திரன் முருகனுக்குப் பாதபூஜை செய்தான்,* 6. பின்னர் இந்திரன் மணமகள் கையை முருகன் கையில் வைத்துத் தாரைவார்த்துக் கொடுத்தான்.* 7. பிறகு நான்முகன் தன் கருத்திஞல் ஆக்கிக் கரத்திஞல் அளித்த மங்கலநாணை முருகன் தெய்வயானைக்கு அளித்தான்.

(*இவ்வழக்கங்கள் இப்போதும் உண்டு.)

கந்தபுராணத்திலேயே திருக்குற்ருலப் படலத்தில் மங்கலநாண், பொற்ருலி என்றும் குறிக்கப்படுகிறது. எனவே, 8-ஆம் நூற்ருண்டில் நூலாக நுழைந்த ஒன்று 12-ஆம் நூற்ருண்டில் மங்கல நாணுகவும் பொற்ருலியாகவும் புகழ் பெற்றுவிட்டது எனலாம்.

இனி, தமிழ்நாட்டு வரலாற்றைத் தனிச்சிறப்புடன் கூறும் கி. பி. 12-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த பெரிய புராணத்தில் சுந்தரர் திருமணம் இரண்டும் சம்பந்தர் திருமணம் ஒன்றும் ஓதப்பட்டுள்ளது. இவற்றுள் சுந்தரர் திருமணம் காதல் - கலப்புத் திருமணங்கள். ஸ்மார்த்த பிராமணராகிய சம்பந்தர் திருமணம் வைதிக முறையில் அமைந்தது. இதில், 1. மணமகள் தந்தையார் சம்பந்தரின் பாதங்களை விளக்குதல்.* 2. தாரைவார்த்துத் தருதல்,* 3. மறை ஒலி பொங்குதல்.* 4. மங்கல வாழ்த்து நடைபெறல்,* 5. பொரி கட்டுதல்,* 6. சம்பந்தர் மணமகளைக் கைப்பிடித்துத் தீ வலம் வருதல்—* ஆகிய குறிக்கப்பட்டுள்ளன.

(*இவ்வழக்குகள் இப்போதும் உண்டு.)

இனி, குங்குலியக்கலய நாயனர் புராணத்தில் பொருளின்மையால் அவர் மனைவியார் தமது மங்கல நூலில் கோர்க்கப்பட்டிருந்த தாலியைக் கழற்றிக் கணவரிடம் கொடுத்து நெல் வாங்கிவரச் சொன்னுர் என்று சேக்கிழார் கூறியுள்ளார்.

"கோதில் மங்கலநூல்தாலி கொடுத்து நெற் கொள்ளும்" என்றுர்.

இப்பொருண்மை வாய்ந்த வரியால் எட்டாம் நூற்றுண்டிற்கும் பன்னிரண்டாம் நூற்றுண்டிற்கும் இடையில் நூலிலிருந்த தாலி பெற்ற வளர்ச்சி விளங்கும்.

கவிச்சக்கரவர்த்தி கம்பர் தாலியைக் (1) 'கழுத்தில் நாண்' (2) மங்கலத்தாலி (3) திரு என்று குறிப்பிடுகிறார். இன்றும் 'திருப்பூட்டல்' என்னும் வழக்கு செட்டிநாட்டிலும் 'திருக்கல்யாணம்' என்னும் வழக்கு எங்கும் இருத்தல் கருதத்தக்கது.

இனி, தஞ்சைவாணன் கோவைக்கு உரை வரைந்த சொக்கப்ப நாவலர் (18-ஆம் நூற்றாண்டு) உரையால் விளங்கும் சிறந்த குறிப்பு ஒன்று உண்டு. அக்குறிப்புரைக்கும் உரைப்பகுதி வருமாறு:

"உடன்போய்த் தன் ஊரின் கண்ணே வரைதலும், மீண்டுவந்து தன்மனையின் கண்ணே வரைதலும் அந்தணர் சான்றோர் முன்னிட்டுத் தாய்,தமர் அறிய மணச்சடங்கின் முறையே முடியாமையால் அவை இரண்டும் மணமாகா; அஃது என்னை எனில், உலகியலில் தாய், தமர் அறியாது, மணச் சடங்கும் இன்றி, ஒருவன் உரிமை கருதித் தாலி கட்டும் மணம் 'மணம்' என்று உலகின் கண் உள்ளார் கைக்கொள்ளார்; அவர்க்கே மீண்டும் மணச் சடங்குடனே மணமுடிப்பர்; ஆதலால், அந்தணர் முதலாயினரை முன்னிட்டு அவன் மனையில் மணச்சடங்குடனே முடித்தலின் இதுவே மணமாயினவாறு உணர்க."

இப்பகுதியால் எவ்வாறு ஓரளவு சடங்குகற்றப் பிற்காலத் தமிழர் திருமணம் இன்னும் பிற்காலத்தில் சடங்குடையதாயிற்று என்பது விளங்கும்.

இனி, எட்கர் தர்ஸ்டன் வரைந்துள்ள Castes and Tribes என்னும் தொகுதியால் தெரிவன :

1. இன்றும் மலையாள மக்களிடையே தாலி கட்டும் மரபு உண்மைத் திருமணத்தில் இல்லை; புத்தாடை (முண்டு) கொடுத்தல் உண்டு. 2. பழங்குடி மக்களாகிய தொதவர், கோதர், படகர், கோயிகள், கொண்டர், சவரர், முதுவர், ஒட்டர், ஏனாதி, செருமார், முக்குவர், பலியர், வலையர், புலையர், பறையர், நாயாடிகள், பனியர், மலக்கர், கரிம்பளர், மலையர், மலசர், காடர், வேட்டுவர், மரவிலோர், அருநடர், காப்பிலியர், கொரகர், காடு குறும்பர், மொயர், கார்விகள், பாணர், ஒடாரி முதலியோர் தாலி கட்டல் இல்லை. 3. முக்குலதேவர் மரபில் மணமகளின் உடன்பிறந்தவர் மணமகளுக்கு அவள் வீட்டிற்குச் சென்று தாலிகட்டி அழைத்துவரும் வழக்கம் இருக்கிறது. இவர்களுள் சிலர் இரண்டு மூன்று குழந்தைகள் பெற்றபின்பு பலரறிய மணம் கொள்ளும் பழக்கமும் இருக்கிறது.

4. கொங்கு வேளாளருள் அவரினத்துப் புரோகிதரான அருமைக்காரரே தாலிகட்டுவார். கோலியர் வகுப்பில் இருவகை மணம் உண்டு. சிறிய திருமணத்தில் நாத்தியும், பெரிய திருமணத்தில் மணமகனும் தாலிகட்டுவர்.

5. சில மட்பாண்டத் தொழிலாளருள்ளும் கோட்டை வேளாளருள்ளும் நல்வாழ்வு வாழ்ந்த வருமான ஒருவரும் பெண்ணின் நாத்தியும் சேர்ந்து தாலிகட்டுவர். பள்ளருள் நாத்தி கட்டுதலும் உண்டு; கணவர் கட்டுதலும் உண்டு. பட்டினவர் மறுமணத்தில் கணவனே அவனைச் சார்ந்த ஒரு

பெண்ணே 'நடுவீட்டுத்தாலி' கட்டும் வழக்கம் உள்ளது. உட்பிலியர் திருமணங்களில் நாத்தி, சீர்க்காரி தாலி கட்டுவார். ஊராவியர், வலையர், வல்லம்பர், சலவைத் தொழிலாளர், குறும்பர் வகுப் பாருள் நாத்தியே தாலி கட்டுவார்.

6. தமிழ் உப்பிலியருள் கணவன் இறந்த பிறகும் விதவைகள் தானுகத் தாலி விரும்பும்வரையில் தாலி அணிவர். வலியருள் விதவை தாலி நீக்கார். மறு மணம்செய்ய விரும்பிஞல்தான் முதல் கணவன் கட்டிய தாலி நீக்கப்படும். இக்காலத்து மெய்வழிச் சபையாரும் கணவன் இறந்தபின் தாலி களைவது இல்லை. இம்முறை தாலி கட்டுவோர் அனைவராலும் போற்றிப் பின்பற்றத்தக்கது.

தர்ஸ்டன் நூல் வாயிலாகப் பழங்குடி மக்கள் பலர் தாலிக்குப்பதில் 1. மின்னு 2. கரிய கண்ணுடி வளையல்கள் 3. பித்தளைக் காது வளையங்கள் 4. கரிய மணிகள் கோர்த்த கயிறு 5. பொன்மணி ஒன்றே கோர்த்த கயிறு 6. வலக்கையில் வெள்ளிக் காப்பு 7. காதணியும் காப்பு 8. மத்தள வடிவில் அல்லது பறைவடிவில் அமைந்த 'மாத்ரா' 9. கொடி அல்லது வளையல் 10. பித்தளை மோதிரம் கோர்த்த கயிறு 11. தலைமயிரில் அல்லது பட்டு நூலில் இந்திரன் தலையைக்காட்டும் அலிவிசேடம் 12. 'உந்த மின்னு' அல்லது 'புவியிலை மின்னு' முத லியனவற்றைத் திருமணச் சிறப்பு அணிகளாகக் கருதினர்.

சில ஆண்டுகட்கு முன்பு பெரும் ஆராய்ச்சிக்கு இடமான இத் தாலி தமிழர்க்கே உரியது; காரணம் தாலிகட்டும் வழக்கம் இன்றும் வடநாட்டில் இல்லை. இத் தாலி கட்டும் வழக்கம் ஒருத்தி திருமணமான வள் என்பதை வெளிப்படையாய்க் குறிக்கவும் பெண் ஆணுக்கு அடக்கம் என்று மறைமுகமாக வலியுறுத்தவுமே ஏற்பட்ட வழக்கம் எனலாம்.

பழந்தமிழ் மக்கள் தங்கள் வீரத்திற்கு விளக்கமாகப் போற்றத் தொடங்கிய புலிப்பல் தாலியே பிற்காலத்தில் திருமணத் தாலியாய் மாறிற்று என மதிக்கலாம்.

"தாலி கட்டுதல் போலவே கைம்மைக்கு அறி குறியாகப் பெண்கள் மொட்டையடித்து முக்காடிடலும் தமிழ் வழக்கே போலும்".

(6)

இனி, கி. பி. எட்டாம் நூற்றுண்டு தொட்டுத் தொடங்கி விரிவாகிவிட்ட வைதிகத் திருமணச் சடங்குகளின் பொருண்மை பற்றிய ஓர் குறிப்பைப் பார்த்துவிட்டு இக்காலத் திருமண முறைகளைக் கருதலாம். இக்குறிப்பு 'கலைக் களஞ்சி'யத்தில் இருப்பது.

## மணச் சடங்குகள் (Marriage-rites)

"மணச் சடங்குகளில் தம்பதிகளுக்கு உண்டாகும் புதிய நிலையையும் மாறுதல்களையும் பந்தல் அமைத்தல், ஊர்வலம் வருதல், மத்தளம் கொட்

டல், சங்கம் ஊதல் போன்றவைகள் விளம்பரப் படுத்துகின்றன. பரிசமிடுதல், நிச்சயம் செய்தல், கோத்திரம் கூறல் போன்ற சடங்குகள் மன ஒப்பந் தத்தையும், அதற்கு வேண்டிய சான்றுகளையும் அளிக்கும். தீபம் ஏத்தல், ஆரத்தி, நலங்கு முதலிய சடங்குகள் கண்ணேறுபடாமல் காப்பதற்காகச் செய்யப்படுபவை. விரதம், உபநயனம், காப்புப் போன்ற சடங்குகள் தம்பதிகள் இதுவரையி லிருந்த நிலையிலிருந்து விலகியிருத்தலைக் குறிக் கும். புத்தாடை அணிதல், தாலி மெட்டிப் போன்ற நகைகளை அணிதல், மாலை, மோதிரம் மாற்றல், தம்பதிகள் புதிய நிலைக்கு மாறுதலை அறிவிக்கும். தீ வலம் செய்தல், அம்மி மிதித்தல், அருந்ததி காட் டல், குங்குமம் அப்பல், பட்டம் கட்டுதல், மஞ்சன மாடல், தாரை வார்த்துத் தருதல், கைத்தலம் பற்றல் போன்ற சடங்குகள் தம்பதிகளுடைய புதிய கடமைகள், உரிமைகள், நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தும். ஆசீர்வாதம், விருந்தளித்தல் போன்ற சடங்குகள் தம்பதிகளுடைய புதிய வாழ்க் கைக்கு வேண்டிய ஆதரவளிப்பனவாகும்.

(7)

இந்த வைதீகத் திருமணச் சடங்குகள் ஒரு நூற்றாண்டுக்கு முன்புவரை பார்ப்பனப் புரோகிதர் இன்றி வள்ளுவர் முதலியோரைக் கொண்டு திருமணச் சடங்குகள் செய்த வகுப்பாருள்ளும் ஊடுருவியுள்ளது வியக்கத்தக்கது. சிறப்பாகத் தீண்டாமை ஒழிப்புச் சட்டம் வந்தபின் அதையும்

பயன்படுத்திக்கொண்டு பார்ப்பனப் புரோகிதர்கள் சேரிகளுள்ளும் செல்வாக்குச் செலுத்துகின்றன ராம். சம்பிரதாயத்தில் வசதி படைத்தோர் செய்யும் முறைகளை அப்படியே பின்பற்றும் ஏழை மக்க ளின் இயல்பையே இது காட்டுகிறது.

(8)

இனி தமிழ்நாட்டுச் சாதிகள் பலவற்றுள் பழமையாக இருந்து வந்த திருமண முறைகளை ஒப்பிட்டு ஆய்வது பெரிதும் விரும்பத்தக்கது. எனினும் எனக்கு அதற்கு நேரம் இன்மை குறித்து வருந்துகிறேன். ஆயினும் கொங்கு வேளாளர் திருமணத்தில் நாவிதன் கூறும் திருமண வாழ்த்து ஈன்னைப் பெரிதும் கவர்ந்தது.

(9)

தமிழர் திருமண முறைகளுள் சிறப்பு வாய்ந்த ஒன்று கோயில் திருமணங்கள். பெரிதும் நாட்டுப் புற மக்கள் அல்லது ஏழை மக்கள் இன்றும் கோயில்களில் இத்தகைய எளிய முறைத் திரு மணம் மேற்கொள்கின்றனர். செல்வர்கள் வேண் டுதல் காரணமாகவும் கோயில் திருமணங்கள் புரிவதுண்டு ஆரவாரத்துடன்.

காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலில் நடைபெறும் இறைவன் திருமணத்தின்போது பெற்றோர் அறிந் தும் அறியாமலும் நடைபெறும் ஏராளமான தொகைத் திருமணங்கள் (Mass Marriages) குறிக்கத்தக்கன.

(10)

இனி, வைதிகத் திருமண முறைகள் செல்வாக் கிழக்கத் தொடங்கிய இருபதாம் நூற்றுண்டுச் செய்திகளேக் காண்போம். வைதிகத்திற்கு வந்த விபத்திற்கு முதல் பெருங்காரணம் இந்திய தேசிய விடுதலே இயக்கமே. இதையொட்டி எல்லாத் துறைகளிலும் ஏற்பட்ட புதிய சிந்தனேகள் காரண மாகப் பல செயல்கள்—எதிர்ச் செயல்கள் ஏற்பட் டன. அவற்றுள் இன்று இங்கு நாம் கருதத்தக்கன இரண்டு : 1. மொழிவழி இனவுணர்ச்சி, 2. பகுத் தறிவு. இவ்விரண்டையும் பகுத்தறிவு என்ற ஒரே தலேப்பில் அடக்கலாம் என்பது என் கருத்து. இதன் பயனுகப் (1) பலருக்கும் புரியாத வடமொழி யில் மந்திரங்கள் ஓதுவதும், (2) சாதி வேற்றுமை பாராட்டுவதும், (3) பொருள் விளங்காச் சடங்கு களே நிகழ்த்துவதும் வெறுக்கப்பட்டது. இதன் விளேவாகவே நாட்டில் (1) தமிழ்த் திருமணங்கள், (2) திருந்திய திருமணங்கள் அல்லது சீர்திருத்தத் திருமணங்கள் அல்லது சுயமரியாதைத் திருமணங்கள் நிகழலாயின.

இம்மறுமலர்ச்சிக்கு வித்திட்டோர் திராவிடத் தந்தை பெரியார் ஈ. வே. ரா.வும், தனித்தமிழ்த் தந்தை மறைமலேயடிகளாரும் எனலாம். இவ்விரு வருள் முன்னவர் தெய்வ நிந்தனே செய்பவர்; பின்னவர் தெய்வ வந்தனே செய்பவர். எனவே, இவ்விருவரும் வடமொழி ஒழிப்பு, பார்ப்பனப் புரோகித ஒழிப்பு ஆகிய இரண்டிலும் ஒருமை யுடையவர். ஆனல் முன்னவர் சமயச் சார்புக்கு

எதிராக இராகு காலத்தில் திருமணம் செய்தல், தாலி கட்டாதிருத்தல் போன்றனவும் செய்தார். பின்னவர் நாள், கோள் பார்த்துச் சமயச் சடங்குகள் சிலவற்றையேனும் தமிழ்வழி நடத்தத் தலைப்பட்டார். இவ்விரு பெருமக்களையும் பின்பற்றி ஏராளமான திருமணங்கள் நடைபெற்று வருகின்றன. இவற்றுள்மிகப்பெரும்பாலானவைசொற்பொழிவுத் திருமணங்களாக உருமாற்றம் பெற்றுள்ளன. இப்போது கவியரங்கங்களும் நடக்கத் தொடங்கியுள்ளன. விரைவில் பட்டிமன்றங்களும் நடைபெறலாம். இவற்றுள் சில கட்சிப் பிரசாரங்கட்கும் பயன்பட்டு வருகின்றன. சமய நம்பிக்கையுடைய தமிழ்த் திருமணங்களில் தெய்வத் தமிழ் முழங்குகிறது.

இனி இக் கட்டுரையை முடிக்குமுன் தொகுத்துக் கூறத் தக்கன:

1. சங்க காலத் திருமணம் இயற்கையையும் பகுத்தறிவையும் ஒட்டியது. 2. அதில் சாதி வேற்றுமை இல்லை. 3. குழந்தைத் திருமணமும் இல்லை. 4. வடமொழி மந்திர வழிபாடு இல்லை. 5. சங்க காலத்தில் இறுதி நிலையில் சிறப்பாகக் காப்பியக் காலத்தில்தான் ஆரிய முறைகள் ஆதிக்கம் பெற்றன. 6. அவை நாளடைவில் சிறப்பாக நம் நூற்றாண்டில் நாட்டுப்புற மக்களின் வாழ்வையும் ஊடுருவத் தொடங்கியது. 7. தாலி கட்டும் முறை தமிழருடையதே. 8. இம்முறை கி. பி. எட்டாம் நூற்றாண்டிலிருந்து தமிழர் வாழ்வில் இடம் பெற்றிருக்கலாம். 9. தமிழர் திருமண முறைகளில் இரு

வேறு வகைகளில் மறுமலர்ச்சிகளை ஏற்படுத்தியவர் மறைமலை அடிகளாரும், பெரியாரும் ஆவர். *10.* தமிழர் திருமண செல்வக் களியாட்டுத் திருமணங்களும் உண்டு; எளிய கோயில் திருமணங்களும் உண்டு. *11.* தமிழர் திருமண முறைகளில் நாட்டின் *(1)* சமூகவியல், *(2)* சமயவியல், *(3)* பொருளியல், *(4)* அரசியல் தாக்குதல்களை உறுதியாகக் காணலாம்.

*[சென்னைப் பல்கலைக் கழகத்தின் மரபுவழிப் பண்பாட்டு நிலையத்தின்* (Institute of Traditional Cultures) *சார்பில் 17–4–'72ஆம் நாள் நடைபெற்ற கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரை.]*

# பிள்ளை வளர்ப்பு

பேராசிரியை திருவாட்டி
கிருஷ்ணு சஞ்சீவி, எம்.ஏ., பி.டி..
தமிழ்த்துறைத் தலைவர்,
மேரி அரசிக் கல்லூரி, சென்னை-4

## நாட்டின்—வீட்டின் உயிர்

நாட்டின் உயிர்—சமுதாயத்தின் அடிப்படை—வீடு. அவ்வீட்டின் உயிர் குழந்தைகளே. நன்கலமாய மக்கட் பேற்றினைக் கொண்ட மங்கலமாய மனைமாட்சி சிறவாத எந்த நாடும் செழிப்புற்று இருக்க முடியாது. குடும்பத்தில்தான் வருங்காலத் தலைவர்களாகிய குழந்தைகள் தங்கள் வாழ்க்கையின் ஆரம்ப நாட்களைக் கழிக்கின்றனர். அந்நாளில் அவர்களது பிஞ்சு உள்ளங்கள் பசுமரத் தாணிபோலப் பழக்க வழக்கங்களை ஏற்றுக் கொள்கின்றன. எனவே குடும்பமே சமுதாயத்தின் செல்வங்களாகிய குழந்தைகளின் உடல்—உள்ள உயிர்ப் பண்புகளை உருவாக்கும் உலைக்களம்.

இந்தத் தலைமுறையில் குழந்தைகளாயிருப்பவர்கள் அடுத்த தலைமுறையில் பெற்றோர்களாயிருப்பர். 'இன்றைய குழந்தை நாளைய தந்தை!'. இன்றைய குழந்தைகள் மனத் தெளிவையும் உடல் திண்மையையும் பொறுத்தே நாளைக்கு அவர்கட்

குப் பிறக்கும் மக்களின் மனத் தெளிவும் உடல் திண்மையும் அமையும். அதனால் குழந்தைகளின் உடல் வளர்ச்சியிலும் மனவளர்ச்சியிலும் ஒழுங்கும் ஒழுக்கமும் நிற்றல் வேண்டும். அந்த ஒழுங்கும் ஒழுக்கமும் கடவுள் நெறியின் அடிப்படையிலேயே கற்பிக்கப்படுதல் இன்றியமையாதது.

## ஊட்டம் தரும் உணவு

குழந்தை பிறக்கு முன்பே தன் உடலில் சிறிதளவு இரும்புச் சத்தைப் பெற்றிருக்கிறது. பிறந்த பின்னர் அச்சத்துச் செலவழிந்து விடுவதால் ஆறு மாதக் குழந்தைக்கு இரும்புச் சத்து மிகத் தேவையாயுள்ளது. ஒன்பது மாதங்கள் வரை குழந்தையின் சிறந்த உணவு பசுப்பால். இதில் எல்லாச் சத்துக்களும் அமைந்திருப்பினும் குழந்தைக்கு அந்தப் பருவத்தில் தேவையான இரும்புச் சத்துக் குறைவு. அதேபோல் கால்சியமும் பாஸ்வரமும் பாலிலுள்ள சர்க்கரைப் பொருளால் பாதிக்கப்படுவதால் அவை இரண்டும் குறைபடுகிறது. இரும்புச் சத்து இல்லையெனில் இரத்த சோகையும், பாஸ்வரமும் கால்சியமும் குறைபடின் எலும்பு வளர்ச்சிக் குறைபாடும் ஏற்படுகிறது. முட்டையின் வெள்ளைக் கருவில் இரும்புச் சத்து அதிகம். எனவே, முட்டையின் வெள்ளைக் கருவைப் பாலில் கலந்து இரண்டு தேக்கரண்டி கொடுக்கும்படி டாக்டர்கள் கூறுகின்றனர். இதைவிட இரும்புச் சத்துள்ள

சைவ உணவுப் பொருள்களாகிய முருங்கைக் கீரை, அரைக்கீரை முதலியவற்றை உப்பிட்டுச் சாருக (ரசம்) வைத்தோ அல்லது 'சூப்' (Soup) ஆக வைத்தோ அத் தண்ணீரைக் கொடுப்பது சிறந்தது. பாஸ்வரம், கால்சியத்தைச் சரிசெய்ய ஆறு மாதங்கட்குப் பிறகு சிறிது சிறிதாக வெண்ணெயைச் சேர்த்துக் கொள்ளல் நலம்.

புரோட்டீன் (Protein) உடல் வளர்ச்சிக்கும் உடலில் சிதைந்த திசுக்களைப் (Tissues) புதுப்பிக்கவும் மிகவும் தேவை. முக்கியமாகச் சீரணப் பாதையில் பாக்டீரியாக்களால் ஏற்படும் பாதிப்புகளைப் புரோட்டீனிலும், வைட்டமின் 'பீ'—யிலும் உள்ள 'பெரிகாரிப்' என்ற பொருள் தடுக்கிறது. இது கைக்குத்தல் அரிசியிலும் தவிடு நீக்கப்படாத அரிசியிலும் அதிகமாயுள்ளது. மேலும் அரிசியிலுள்ள மாவுப் பொருளில் (Starch) சிறிதளவு பாஸ்வரமும் இருக்கிறது.

நாம் பயன்படுத்தும் பருப்பு வகைகள், விதைகள் முதலியவற்றில் இளஞ்செடி தோன்றத் தேவையான சத்துப் பொருள் சேர்த்து வைக்கப் பட்டுள்ளன. தண்ணீரில் இவை ஊறினவுடன் அச் சத்துப் பொருள்கள் கரைந்து மாறுதலடைந்து இளஞ்செடி அச்சத்துக்களை ஏற்றுச் செரிக்கத்தக்க எளிய நிலையிலுள்ளது மேலும் முளை கிளம்பிய தானியங்களில் வைட்டமின் 'சி' (Vitamin C) உள்ளது. எனவே அமில (Acid)த் தன்மையுடைய அரிசிச் சாதத்துடன் கார (Alkaline)த் தன்மை

யுடைய வைட்டமின் 'சி' அடங்கிய முளை கிளம்பிய தானியங்களையோ—கிழங்கு வகைகளையோ—பச்சைக் காய்கறி வகைகளையோ அல்லது புளிப்புள்ள பழங்களையோ சேர்த்துக் குழந்தைகளுக்குக் கொடுத்தல் நல்லது. இவை நன்முக வேகவைக்கப்பட்டு நசுக்கப்பட்டு மென்மையான பொருளாக்கப்பட்டபின் குழந்தைகளுக்குக் கொடுத்தால்தான் எளிதில் செறிக்கும். ஆண்டுதோறும் வாலாசாபாத் இந்துமத பாடசாலையைச் சார்ந்த வள்ளலார் இல்லத்தில் வாழும் எண்ணூறு குழந்தைகளும் கைக்குத்தல் அரிசியையும் முளை கிளம்பிய பருப்பு வகைகளையும் உண்டு உடல்நலம் பெறுகின்றனர். இக்கட்டுரை கூறும் வேறுபல குறிப்புகளும் அவர்கள் வாழ்வில் காணத்தக்கன.

### வைட்டமின்கள் வேண்டும்

வளரும் குழந்தைகட்கு வைட்டமின்கள் இன்றியமையாதன. பச்சைக் காய்கறிகளில் 'காரடீன்' என்ற சத்துப் பொருளும் வைட்டமின்களும் உள்ளன. காரடீன் வைட்டமின்களின் வேலையைச் செய்கிறது. வைட்டமின் 'சீ'—யும், வைட்டமின் 'டி'—யும் குழந்தைகளின் உணவில் குறையுமானல் அதன் எலும்பு வளர்ச்சி குறைபடும். வேறு எந்த வைட்டமின் குறையினும் குழந்தை நன்முக வளர்ந்தபின்கூடச் சரி செய்துகொள்ள வழிகளுண்டு. வைட்டமின் 'டி' குறைவு நெஞ்சுக்கூடு கட்டல், முட்டிக் கால் இடித்தல், இடுப்பெலும்பு குறுகுதல், எலும்பு முனைகள் பெருத்தல் போன்ற

நிலையான குறைபாடுகளை எலும்பு வளர்ச்சியில் உண்டாக்குவதால் குழந்தை வளர்ந்தபின் இக் குறைகளைச் சரி செய்யவே இயலாது. எனவே ஆரம்பத்திலேயே வைட்டமின் 'டி' குறையைப் போக்க வேண்டும். பால், வெண்ணெய் முதலிய உணவுப் பொருள்களில் இந்த வைட்டமின் நம் உடலில் உற்பத்தியாகிறது. இதனால் குழந்தை கட்குப் போதுமான சூரிய வெளிச்சம் கிடைக்கு மாறு செய்தல் நல்லது. அதற்குரிய சிறந்த வழி சூரிய வெளிச்சத்தில் குழந்தைகளை விளையாட விடுதலே ஆகும்.

மனித வாழ்க்கை உழைப்பு நிரம்பியது. உழைப்பு சக்தியின்—ஆற்றலின்—ஓர் உருவம். இந்த ஆற்றலைப் பெறவே குழந்தை முதல் கிழவர் வரை எல்லோரும் உணவு உட்கொள்கிறோம். மேலும் வெளியில் உள்ள வெப்பத்திலும் நம் உடல் வெப்பம் குறைவாயிருப்பதால் நம் உடலுக்குத் தேவையான வெப்பத்தையும் நாம் நம் உடலி லிருந்தே பெற வேண்டியுள்ளது. இத்தகைய ஆற்றலையும் வெப்பத்தையும் தரக்கூடியவை கார்போ–ஹைடிரேட்டும் (Carbo-hydrates), கொழுப்பும் (Fats) ஆகும். தண்ணீரில் கரையாத கார்போ–ஹைடிரேட்டு மாவுப் பொருள் (Starch) வடிவத்தில் அரிசி, கோதுமை, கேழ்வரகு முதலிய தானியங்களில் நிறைந்துள்ளன. தண்ணீரில் கரையக்கூடிய கார்போ–ஹைடிரேட்டு சர்க்கரை உருவில் கரும்பு, வெல்லம், பனைவெல்லம், அஸ்கா, இனிப்பான பழச்சாறுகள் முதலியவற்றுடன்

நிறைந்துள்ளன. இச் சர்க்கரை மூச்சிழுக்கும் போது கிடைக்கும் உயிர்க் காற்றுடன் (Oxygen) எரிந்து வேலை செய்ய ஆற்றலையும் வெப்பத்தை யும் தருகிறது.

எளிய உணவில் வலிய உணவு

எனவே, குழந்தை உணவில் பால், மோர், தயிர், வெண்ணெய், பழச்சாறுகள் இவை இன்றி யமையாமல் இடம் பெறல் வேண்டும். மோர் ஏழை முதல் பணக்காரர் வரை யாவரும் பெறத்தக்க எளிய உணவு. அதேபோல எல்லோராலும் ஆப்பிள் உண்டு வளர இயலாது. அவர்களுக்குத் தினம் இரண்டு நெல்லிக்கனிகளைக் கொடுப்பின், அது ஒரு ஆப்பிளுக்குச் சமமான சத்துக்களைக் கொடுக்கின்றது. எனவே நெல்லிக்காய் ஊறுகாய் மிகவும் நல்லது. இதேபோல் விலை அதிகமாயுள்ள உணவுப் பொருள்களில் இருக்கும் சத்துக்கள் எளிய உணவுப் பொருள் எவ்வெவற்றிலிருக்கிற தென ஆராய்ந்து அறிந்தவரை—உணவியல் அறி ஞரைக் கலந்து அவற்றைக் குழந்தைகட்டுக் கொடுத்தல் நலம். கலைக் களஞ்சியம் போன்ற நூல்களை நூல் நிலையத்திலேனும் பார்த்து அதில் உணவியல் பற்றிப் பொதுவாகவும் உணவுப் பொருள் ஒவ்வொன்றைப் பற்றியும் சிறப்பாகவும் உள்ள கட்டுரையைப் படித்துப் பயன்பெறல் வேண்டும். உணவு மருத்துவம் பற்றியும் கைமருத்துவம் பற்றியும் உணவுப் பொருள்கள் பற்றியும் அறிஞர்கள் அவ்வப்போது எழுதும்

கட்டுரைகளையும் நூல்களையும் ஆழ்ந்து கற்றுப் பயன் அடைய வேண்டும்.

பிள்ளைகட்கு உணவின் அவசியம் தெரியாது; சிலவற்றை விரும்புவர்; சிலவற்றை விரும்பார். அவர்களுக்கு விருப்பமில்லாத பொருள்களிலுள்ள சத்துக்கள் அவர்கட்கு விருப்பமான எந்தப் பொருள்களில் இருக்கின்றன என்பதை அறிந்து உணவு கொடுத்தல் வேண்டும். உணவு உண்ணக் கட்டாயப்படுத்தக் கூடாது. விரும்பியவற்றை விருப்புடன் உண்ணப் பழக்க வேண்டும். சில குழந்தைகள் பசி, சாப்பிட விருப்பம்—இவை இருந்தும் சாப்பிட மறுக்கும். நரம்புத் தளர்ச்சி, புரட்சி மனப்பான்மை, அடம்பிடித்தல்—காரணமாகக்கூட அவ்வாறு மறுக்கலாம். அத்தகைய குழந்தைகளிடம் இரக்கம், பரிவு, அன்பு காட்டி அவைகளின் மனத்தில் ஏற்பட்டிருக்கும் குறைபாட்டை அறிந்து அதைத் தவிர்க்க முற்பட வேண்டும். சுறுசுறுப்பான குழந்தைகள் வயதுவந்த உடல் உழைப்பாளியைப் போன்று கடின வேலை செய்ய ஆற்றலுடையனவாயிருக்கும்.

## 2

## உடுக்கும் உடை

### உடல்நலத்துக்கே உடை

'ஆடையில்லாதவன் அரை மனிதன்' என்பது ஆன்றோர் வாக்கு. சத்துள்ள உணவால் மட்டும்

குழந்தை வளர்ச்சியடைவதில்லை பருவ நிலைகட்கும் தேவைகளுக்கும் ஏற்ற தூய உடை அணிவித்தல் குழந்தையின் உடல்நலத்திற்கும் மன வளர்ச்சிக்கும் நலம் செய்வதாகும். 'கந்தையானுலும் கசக்கிக் கட்டு' என்பது நம் நாட்டு பழமொழி. எனவே உணவிலும், உடையிலும் எதிலும் 'சுத்தம் சோறு போடும்'. அதனுல் மறந்தும் அழுக்கு உடைகளைக் குழந்தைகட்கு அணிவிக்கக் கூடாது. அழுக்கு ஆடையில் சொறி சிரங்கு முதலிய நோய்கள் பலவும் வரும். ஆகையால் சிறுவயதிலிருந்தே குழந்தைகள் தூய ஆடை அணியும் பழக்கத்தை—வேட்கையை—உண்டு பண்ண வேண்டும்.

அதிக வெப்பமும் அதிகக் குளிரும் குழந்தையை எளிதில் தாக்கும். எனவே கோடையில் குளிர்ச்சியையும், குளிர் காலத்தில் வெப்பத்தையும் தரக்கூடிய ஆடைகளைத் தேர்ந்தெடுத்தல் நலம். குறைவான—கனமில்லாத—எளிதில் சலவை செய்து சுத்தம் செய்யக்கூடிய—காற்று எளிதில் உள்ளே செல்லத்தக்க துணியாக இருத்தல் வேண்டும். அத்தகைய ஆடை பருத்தி ஆடையேயாகும் அது ஒரு சிறந்த வெப்பக் கடத்தி (Conductor of heat) ஆகும். பருத்தி உடை உறுதியும் அழகும் உள்ளது; உடம்போடும் ஒன்றியிருக்கும்; உடம்புக்குக் குளிர்ச்சியையும் தரும் தன்மையுடையது.

குளிர் நாட்களில் மெல்லிய கம்பளி ஆடைகளே நம் நாட்டு மக்களுக்குப் போதுமானவை. மிருகங்

களைக் கொன்று அவற்றின் தோலால் ஆகிய ஆடைகளை உடுத்த வேண்டிய இன்றியமையா மையே இல்லை. கம்பளி ஆடையைப் பயன்படுத்தும்போதும் உள் ஆடை நூலாடையாக இருத்தல் வேண்டும். அடிக்கடி உள் ஆடைகளைத் துவைத்து உலர்த்திச் சுத்தமாக உடுத்த வேண்டும். குழந்தைகளைக் குளிப்பாட்டினவுடன் உலர்ந்த வெண்மையான உள் ஆடைகளை அணிவித்தல் வேண்டும். இதனுல் குழந்தைகட்கு மன மகிழ்ச்சியும் உடல் நலமும் ஏற்படும்.

உள் ஆடை தளர்த்தியாகவோ அல்லது இறுக்கமாகவோ இருத்தல் கூடாது. இதனுல் வளரும் குழந்தைகளின் இரத்த ஓட்டமும் தசை அசைவுகளும் இடர்ப்படும். உட்காருதல், நிற்றல், நடத்தல் முதலிய பழக்கங்களும் பாதிக்கப்படும். மேலும் உடைகளைத் தளர்த்தியாகத் தைத்துப் பயன்படுத்துவதால் குழந்தைகள் தாமாகவே உடைகளைக் கழற்றவும் திரும்ப உடுத்திக் கொள்ளவும் கற்றுக்கொள்ள உதவியாயிருக்கும்.

இரவில் குழந்தைகள் தாராளமாய்க் கைகால்களை நீட்டிப் புரண்டு படுக்கத் தக்க முறையில் தளர்ச்சியான மெல்லிய ஆடைகளைப் போடவேண்டும். இடுப்புக் கச்சங்களையும் தளர்த்திவிடவேண்டும் சிறு பிராயத்திலேயே தளர்த்தியான மிதியடிகளை அணிவித்துப் பழக்கினுல் வளரவளர, மிதியடிகளின் இன்றியமையாமை உணர்ந்து சரியான முறையில் அவற்றைப் பயன்படுத்தக் குழந்தைகள் கற்றுக்கொள்ளும்.

குழந்தைகள் ஆடையின் இன்றியமையாமை யையும், அவற்றைத் தூய்மையாய் வைத்துக் கொள்ள வேண்டுவதன் இன்றியமையாமையை யும் நன்ருக உணரும்படி செய்தல் வேண்டும். உயர்ந்த பட்டாடைகளை உடுத்தி அவற்றை அது கவனிப்புடன் பார்த்துக்கொள்ளும் என எதிர் பார்த் தல் கூடாது. மண், தண்ணீர் இவற்றருகே விளை யாடும் குழந்தைகட்கு எளிதில் சுத்தம் செய்யக் கூடிய உடைகளை உடுத்த வேண்டும். பழக்கம் காரணமாகக் குழந்தைகள் அழுக்குத் துணிகளை நீக்கித் தூய ஆடைகளை விரும்பக் கற்றுக்கொள் ளும். இதனுல் சுகாதார நல்வாழ்வு—உடல்நலப் பழக்கம் ஏற்படுவதன்றி அழுக்குக் கிருமிகளால் ஏற்படும் தீமைகளையும் நீக்க இயலும்.

## உறையும் மனை

நல்வாழ்விற்குச் சத்துள்ள உணவும் தூய ஆடையும் எப்படி இன்றியமையாதனவோ அப்ப டியே ஒளியும் காற்றும் நிறைந்த வீடும் இன்றி யமையாதது. உண்ணும் உணவும் உடுக்கும் உடையும் உறையும் உறையுளும் உலகத்து உயிர் களுக்கு எல்லாம் இன்றியமையாமல் தேவைப்படும் அடிப்படைகள் என்று முழங்குகிறது இரண்டா யிரம் ஆண்டுகட்கு முன்பு பிறந்த தமிழ் இலக்கிய மாகிய மணிமேகலை. ஆனுல், நம் நாட்டில் எல்லோர்க்கும் உண்ண உணவும், உடுக்க உடை யும், உறைய உறையுளும் கிடைக்கின்றனவா ? இல்லையே ! சிலர்க்கு வாழ்வு; பலருக்குத் தாழ்வு.

இங்கிலே மாறிக் கவியரசர் கம்பர் பாடியதுபோல 'எல்லார்க்கும் எல்லாம்' கிடைக்கப் பாடுபடுவதே தொண்டு. அத்தொண்டை நாம் ஒவ்வொருவரும் செய்வோமாக

இனி, வீடுபற்றி எண்ணுவோம். உணவு எளிய உணவாயினும் சத்துள்ள உணவாக இருக்க வேண்டும் என்றும் ஆடை கிழிந்ததாயினும் தூய தாய் இருக்கவேண்டும் என்றும் பார்த்தோம். அவ் வாறே வீடு சிறியதாயினும் வசதிகள் உடையதாய் இருக்கவேண்டும். 'சிறுகக் கட்டிக் பெருக வாழ்' என்பது பழமொழி. காற்று ஒளியும் இல்லாத வீட்டில் குடியிருக்கக் கூடாது. காற்றும் ஒளியும் இல்லாத வீட்டில் வளரும் குழந்தைகட்குப் பல வகை நோய்களும் வரும. எனவே, சன்னல்கள் பெரிதாக அமைந்துள்ள வீடுகளையே தேர்ந்து குடி யிருக்கவேண்டும். ஒளியும் காற்றும் வாழ்வுக்கு இரு கணகள் போன்றவை. குழந்தைகள் வீட்டிற் குள்ளும் வீட்டின்முன்னும் பின்னும் உட்கார்ந்து படிக்கவும் ஓடியாடி விளையாடவும் வசதியுடைய வீடுகளே நல்ல வீடுகள். வீட்டு மாடி திறந்த மாடி யாக இருப்பின் மிகவும் நல்லது. காலையிலும் மாலையிலும் முறையே கதிரவன் தோன்றுவதையும் மறைவதையும் காண்பதாலும் இரவில் வானவெளி யைக் கூர்ந்து ஆராய்வதாலும் குழந்தைகளின் உடலும் உள்ளமும் நலங்கள் பலவும் பெறும்.

ஒரு வீட்டில் குறைந்தது படிப்பறை, படுக்கை யறை, வழிபாட்டறை, சமையலறை, குளியலறை,

கழிவறை என்று ஆறு அறைகள் இருப்பது நல்லது; ஒரு கூடமும் இன்றியமையாதது. மேற்குறிப்பிட்ட ஆறு அறைகளுள் முன் நான்கும் பெரியவையாயும் பின்னிரண்டும் சிறியவையாயும் இருக்க வேண்டுவது இயற்கை. இவ்வாறு அமைந்த வீட்டில் வாழ வசதியற்றவர்கள் ஒரே கூடம் உள்ள வீட்டில்கூட வாழலாம். ஆனால், அந்தக் கூடம் நிறைந்த காற்றும் ஒளியும் உடையனவாக இருத்தல் இன்றியமையாதது.

வசதி உடைய வீட்டில் இருப்பவர்கள் வீட்டிற்கு முன்னும் பின்னும் குழந்தைகள் தோட்ட வேலைசெய்ய ஊக்கம் அளிக்கவேண்டும். ஒரே கூடத்தில் வாழ்பவர்கள் இயலுமேல் ஒரு சிறு மீன் வளர்ப்புத் தொட்டி வைத்துக் குழந்தைகள் அதில் ஈடுபட்டு மகிழச் செய்யலாம். எல்லாவற்றிற்கும் மேலாக வீட்டு வாழ்க்கைக்கும் பிள்ளை வளர்ப்புக்கும் உள்ள ஒரு தொடர்புபற்றி ஆழ எண்ணல் இன்றியமையாதது. அது, சின்னஞ் சிறு குழந்தைகள் முன்னிலையில் பெற்றோர்கள் பாலுணர்ச்சி வாழ்க்கை வாழக்கூடாது என்பதே ஆகும். குறைவான வீட்டு வசதிகளாலும் தன்னடக்கம் இன்மையாலேயே பெற்றோர்கள் பாலுணர்ச்சி வாழ்க்கை பிள்ளைகளைப் 'பிஞ்சிலேயே பழுக்க'ச் செய்யும்.

## எண்ணும் எண்ணம்

### சூழ்நிலையின் சிறப்பு

உணவால் வளரும் உடலை உடையாலும் உறையும் மனையாலும் மட்டும் பாதுகாத்தல் போதாது.

உடலின் உள்ளே உள்ள உயர்ந்த உள்ளமும் வளர்ச்சி பெறுதல்வேண்டும். 'உள்ளப் பண்பு மரபு வழி வருவதன்று' என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். 'மரபுவழி' நற்பண்புகளும் இயல்பான திறமைகளும்கூடத் தக்க சூழ்நிலையின்மையால் கெட்டுவிடலாம்' என்றும் உளநூல்கள் கூறுகின்றன. எனவே, எண்ணும் எண்ணம் சூழ்நிலையைப் பொறுத்துப் பெரும்பாலும் அமைகிறது

**விளையாட்டு**

விளையாட்டு, குழந்தைகள் ஈடுபடும் வேலைகள் இவ்விரண்டையும் பொறுத்தே மன வளர்ச்சி அமைகிறது. படிப்பும் பயிற்சியும்கூட விளையாட்டினலும் பார்த்துப் பின்பற்றலினலும்தான் அதிகமாய் நடைபெறுகின்றன. ஆனல், நம் நாட்டில் விளையாட்டினல் குழந்தைகள் ஒழுக்கம் உருவாகத் தக்க சூழ்நிலை இன்றும் சரியான நிலையில் உருவாகவில்லை.

குழந்தைகள் இரண்டு வயதுவரை பொம்மை விளையாட்டுகளில் ஈடுபடுகிறது; அப்பொழுது ஆராய்வுத் திறனும் ஏற்படும்; எதைக் கண்டாலும் கைகளால் தொட்டும் வாயால் சுவைத்தும் அப்பொருளை என்னவென்று அறிய முற்படுகிறது. இதைத் தடுத்தல் கூடாது. ஆனல், எளிதில்உடையக்கூடிய அல்லது எச்சிலால் கலங்கக்கூடிய வண்ணங்களுடைய பொம்மைகளை அவற்றிற்குக் கொடுக்கக்கூடாது. மேலும் விளையாட்டில் கொடு

மையும் பொருளிழப்பும் ஏற்பட விடக் கூடாது. குழந்தைகளை எதிர்மறையில் அதிகாரம்செய்து கண்டிப்பதைவிட எதிர்மறைக்கான சூழ்நிலையே ஏற்படாவண்ணம் தவிர்ப்பதே அறிவுடைமை யாகும். மூன்று வயதில் குழந்தைகள் தாய் தந்தை யரைப் பின்பற்றுகின்றன. எல்லா வீட்டு வேலை களிலும் பங்கெடுத்துக்கொள்ள ஆர்வம் காட்டு கின்றன. இத்தக் காலத்தில் பெற்றோர்கள் மிகவும் கவனிப்புடன் நடந்துகொள்ளுதல் வேண்டும். நான்கு வயதில் கற்பனைத்திறன் உண்டாகிறது. தாங்கள் பார்த்தவை கேட்டவைகளைப் பாவனை யிஞல் செயலில் காட்டுகின்றன. அப்போது, குழந் தைகட்குக் குட்டிச்சுவர்களும் தலையணிகளும்கூட வானக்கப்பல்களாகிவிடும்! ஊதல்கள் சத்தத் துடன் குழந்தைகளே இரயில்களாக மாறிவிடும்! பொம்மைகளை இடுப்பில் வைத்துக்கொண்டு தாய் மாராகிவிடுவார்கள்! இது பிறர் செயலைப் பார்த்த படிசெய்யும் காலம்.

கதை கேட்டல் குழந்தைகளுக்கு மிக்க இனிமையானது. சிறந்த கதை—வீரக் கதைகளைக் கூறியே ஜீஜீபாய் சிவாஜியை மாபெரும் வீரனுக்கி ஞர் என்று வரலாறு கூறுகிறது. அதிலும் குழந் தைகட்குக் கேட்ட கதையையே கேட்க விருப்பம் அதிகம். மறந்து நாம் சிறிது மாற்றிக் கூறினே மாஞல் அவற்றை உடனே திருத்திவிடும் இக் காலத்தில் பக்தி நிறைந்த கதைகள், அடியார்களின் வரலாறு, பலதுறை வீரர்களின் வரலாறு, வாய்மை யால் பெரியோர்கள் பெற்ற பேறு, நேர்மையிஞல்

ஏற்படும் நன்மைகள் முதலிய கருத்துகள் நிறைந்த கதைகளைக் கூறுதல் வேண்டும். இத்தகைய கருத்துகள் செறிந்த இலக்கியக் கதைகளைவிடக் குழந்தைகள் தினந்தோறும் காணும் உயிரற்ற பொருள்களாகிய மேசை, நாற்காலி, பென்சில் முதலியவை, நாய், குதிரை, பசு, யானை, காக்கை, குருவி, கழுகு முதலிய விலங்குகள்—பறவைகள் பேசுவது போன்று கற்பனையால் புனையப்பெற்ற கதைகளில் மேற்கூறிய கருத்துகள் அமையுமாறு கதை கூறினுல் அவை எளிதில் குழந்தைகள் மனதில் பதியும். அவற்றின் உயர்வையும் அறிவார்கள். இதனுல் குழந்தைகள் நினைவாற்றல் வளர்வதோடு தாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற தன்னம்பிக்கை உணர்வையும் அவர்கள் திறனுக்கேற்றவாறு தேர்ந்தெடுத்துக் கொள்ளத் தக்க வாய்ப்பும் ஏற்படுகிறது. தெய்வ பக்தியுள்ளவர்களைப் பார்த்துப் பழகும் குழந்தைக்குத் தெய்வ பக்தியும், சுகாதார—நல்வாழ்வு—உடல் நலப் பழக்கமுடையவர்களுடன் கலந்துறவாடும் குழந்தைக்குச் சுகாதார—நல் நல்வாழ்வு—உடல் நலப் பழக்கங்களும் ஏற்படுவது கண்கூடு.

## இசை

இசையின் இனிமைக்கு இசையாத குழந்தைகளே இல்லை.

கதையும் பாட்டும் குழந்தைகளின் மனப் பண்பை உறுதியுடையதாயும் உருக்கமுடையதாக

வும் செய்கிறது. சில குழந்தைகள் இசையில்—பாட்டில்—ஈடுபட்டு அதே போன்று பாடக் கற்றுக் கொள்கின்றன. சுறுசுறுப்பான குழந்தைகள் இசைக்கேற்ற உறுப்பு அசைவுகளையும் ஆட்டங்களையும் தாமாகவே செய்கின்றன. இக்குழந்தைகட்கு நடனம் பயிற்றுவித்தல் நல்லது. இதனால் குழந்தையின் மனம் உற்சாகமடைவதன்றி உறுப்பு அசைவுகளைக் கட்டுப்படுத்தவும் சமனப்படுத்தவும் கற்கின்றன. எனவே நேராக நிற்கவும் நடக்கவும் பயிற்சி ஏற்படுகிறது. ஒரு விதத்தில் இசையின் தாளக் கட்டிற்கேற்ப அசைவுகள் ஏற்படுவதால் சூழ்நிலைக்கேற்ப உள்ளப் போக்கையும் சமனப் படுத்த இக்குழந்தைகள் பயிற்சி பெறுகின்றன. இசையையும் கூத்தையும் குழந்தைகட்குக் கற்பிப்பதன் நோக்கம் உடலைப் போற்றி உள்ளத்தை உயர்த்திக் கலையின் வழி கடவுள் உணர்ச்சி பெறுவதாகவே இருக்க வேண்டும்.

### பள்ளிக்கூட வாழ்வின் பயன்

ஐந்து வயதில் குழந்தைகள் பள்ளிக்குச் செல்கின்றன; பிறர் சொல்லுக்குக் கட்டுப்படுகின்றன; சிந்திக்கின்றன; செயல் ஆற்றுகின்றன.

இந்தக் காலத்தில் வீட்டில் உருவாகிய ஒழுக்கங்கள் நிலைபெறுவதால் வெளிச் சூழ்நிலைச் சோதனைகள் அவற்றைக் குறைவாகவே தாக்குகின்றன. நாவையும் மனத்தையும் கட்டுப்படுத்தி ஒரு ஒழுங்குக்குக் கொண்டுவர ஆசிரியரின் கல்விப் பயிற்சியும் அறவுரைகளும் உதவுகின்றன. பிற

குழந்தைகளுடன் கூடி விளையாடுவதால் தன்னடக்கம், பொறுமை, கோபத்தை அடக்கல், விட்டுக் கொடுத்தல், முயற்சி, சகிப்புத் தன்மை, பிறருக்குக் கீழ்ப்படிதல், மற்றவரிடம் அன்பாகப் பழகுதல் முதலிய பண்புகள் உருவாகின்றன.

## பெற்றோர்—மற்றோர்—கடமை

இவ்வாறு பண்பாட்டின் வழிப் பழக்கமடைகின்ற குழந்தைகளின் வாழ்க்கை உரிமையோடு வளர ஆரம்பிக்கிறது. அவற்றின் வேலைகள் ஒரு கட்டுப்பாட்டுக்குள் இயங்க ஆரம்பிக்கின்றன.

பாரதியார் கூறுவது போன்று,

> காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு
> கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
> மாலை முழுதும் விளையாட்டு — என்று
> வழக்கப்படுத்திக் கொள்ளு – பாப்பா!

என்ற ஒழுங்கு ஏற்படுகிறது. இந்நிலையில் குழந்தையின் வாழ்க்கை செப்பமடையச் செய்ய வேண்டும் பொறுப்பு வீட்டில் பெற்றோருடையதாகவும், வெளியில் பொது மக்களுடையதாகவும் பள்ளியில் ஆசிரியருடையதாகவும் இருக்கிறது. அறிவு வளர வளர, வளர்ச்சிக்கேற்ப பொருள்களின் அறிவையும் புகட்டல் வேண்டும். நல்லது—தீயது, நியாயம்—அநியாயம், சரி—தவறு இவ்வாறு பகுத்து அறியச் செய்தல் வேண்டும். ஆர்வத்திலும ஆராய்ச்சியிலும் அலைபாயும் குழந்தை உள்ளத்தைச் சோம்பித் திரிய விடலாகாது.

## பழக்கத்தின் பலம்

பழக்கம் பலம் வாய்ந்தது. பார்க்குமிடத்து வாழ்க்கையே பழக்கங்களின் தொகுப்பும் பயனும் ஆகும். பழக்கத்தால் கோழி பாறையையும் கீறும் என்று சொல்வார்கள். எனவே குழந்தைகட்கு இளமைப் பருவத்திலேயே நல்ல பழக்க வழக்கங் கங்கள் ஏற்படச் செய்ய வேண்டும். அதற்குச் சிறந்த வழி பெரியவர்கள் நல்ல பழக்க வழக் கங்கள் உடையவர்களாய் இருப்பதேயாகும் தீமைக்கு இருக்கும் கவர்ச்சியும் ஆற்றலும் வியத் தற்கு உரிய வகையில் பெரியதாக உள்ளது. அது ஒரு இயற்கை விந்தை! அதனுல் குழந்தைகளின் கண்கள் தீயதைக் காணுமலும் காதுகள் தீயதைக் கேளாமலும் வாய் தீயதைப் பேசாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். பயிரைப் பூச்சிகள் கெடுத்து விடுவதுபோலப் பிள்ளைகளைக் கெட்ட பழக் கங்கள் கெடுத்துவிடும். அது நேராதபடி சமு தாயப் பயிர்களாகிய குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டுவது ஆசிரியர்—பெற்றோர்—பொதுமக்கள் கடமையாகும்.

'விளையும் பயிர் முளையிலே', 'ஐந்தில் வளை யாதது ஐம்பதில் வளையாது'—இப் பழமொழிகள் குழந்தைப் பருவத்தின் சிறப்பைப் புலப்படுத்தும். எனவே, இப் பருவத்தில் குழந்தைகளிடம் நல்ல பழக்கவழக்கங்கள் ஏற்படவும், கெட்ட பழக்க வழக்கங்கள் ஏற்படாமல் இருககவும் எந்த நேரமும் கண்காணிக்க வேண்டுவது அனைவருடைய சமுதாயக் கடமையும் ஆகும்.

### முன்மாதிரியே நன்மாதிரி

தன்மதிப்பு, நிதானம், மனவலிமை, பிறர் உணர்ச்சியை மதித்தல் முதலிய நற்பண்புகளைப் பழக்கத்தில் கொண்டுவரல் வேண்டும். இவற்றை நேரடியாகக் கற்பிப்பது எளிதன்று. இந்தச் சந்தர்ப்பங்களில் பெரியவர்கள் நடந்துகொள்ளும் முறையைக் கொண்டே குழந்தைகள் இக்குணங்களை மறைமுகமாகப் பயில்கின்றன. நேரடிக் கண்டிப்பில் கட்டாயம் செய்வதால் எதிர்ப்பு உணர்வே வளரும். எனவே, முன்மாதிரியே நன்மாதிரி.

குழந்தைகளிடம் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வதன் நோக்கம் அவர்கள் தங்களைக் காத்துக் கொள்வதற்கான வழியைக் கற்றுக் கொள்வதற்கே. மனித வாழ்க்கையில் பகைமையும் கோபமும் பலக்குறைவைக் காட்டும் கணங்கள். இதனால் முன்னேற்றம் தடைப்படுவதன்றித் தோல்வியும் அவமானமும் ஏற்படுகின்றன. எனவே மனத்தைக் கட்டுப்படுத்திச் செயல்களைச் செய்யக் குழந்தைகளை ஊக்குவித்தல் வேண்டும்.

### பயிற்சியும் பயனும்

கடவுள் அன்பு மயம்; 'அன்பே சிவம்'. குழந்தையின் பிஞ்சு மனத்தை இயற்கையில் புதைந்து கிடக்கும் அழகைக் காணவும் அதைச் சுவைக்கவும் பயிற்றுவித்தல் வேண்டும். இயற்கையின் அழகில் மரம், இலை, பூ, பூச்சிகள், பறவைகள்—இவற்றின் அமைப்பில் எல்லாம் கடவுளின் அளவற்ற ஆற்றலும் உயர்வும் தெரிகின்றன. இவை மனித வாழ்க்

கைக்கு ஊக்கமளிப்பதன்றி—வாழ்க்கை இன்புறவும் இன்புறுத்தவுமே அன்றி துன்புறவும் துன்புறுத்தவும் அன்று என்ற உயர்ந்த பண்பாடு ஏற்பட உதவுகிறது. அழகு உணர்வும் அன்புணர்வும் உள்ள உள்ளத்திலேயே ஆண்டவன் என்றும் வாழ்வான்.

பண்பும் பயனும் நிறைந்த பிற்கால வாழ்விற்குப் பிள்ளைப் பருவம் ஒரு ஒத்திகை. எனவே, அதில் அமையும் ஒழுங்கும் ஒழுக்கமும் உறுதியும் ஊக்கமுமே வாழ்விற்கு இன்பமும் ஒளியும் வழங்கும். 'போலச் செய்யும்' (Imitation) ஒரு பருவம் பிள்ளைப் பருவம். மனித வாழ்க்கையின் அடிப்படையாக அப் பருவம் அமைகிறது. அத்தகைய நுட்பம் வாய்ந்த பருவத்தில் தன்னைச் சுற்றியுள்ளோர்கள்—வயது வந்தோர்கள்—முதியோர்கள்—வாழும் அறிவு நிறைந்த — உணர்வு செறிந்த—ஒழுக்கம் நிறைந்த வாழ்வைப் பார்த்தே பிள்ளைகள் தம் வாழ்வை உருவாக்கிக்கொள்கின்றனர். இப் பெரிய உண்மையை ஆழ உணர்ந்து, வயது வந்தோர் பொறுப்போடு நடந்து கொள்வது பிள்ளை வளர்ப்பிற்குச் செய்யும் மிகப் பெரிய தொண்டு ஆகும்.

கடவுளே குழந்தை; குழந்தையே கடவுள்.

**குழந்தை வாழ்க! குவலயம் வாழ்க!**

**குழந்தை வாழ குவலயம் வாழ்க!**

*(உதவி : சைவ சமயச் சொற்பொழிவுகள் சைவ சித்தாந்த மகா சமாச வெளியீடு, 1959)*

அனைத்திந்திய வானொலிப் பேச்சு
15-10-1971

# தாயும் மகளும்

(திருமதி கிருஷ்ண சஞ்சீவி, எம்.ஏ., பி.டி.)

கலையைப் படிக்க, படிப்பிக்க உணர்வுவேண்டும். உள்ள உணர்வே உயர்ந்த கலையாகும். எண்ணத்தால் உயர்ந்தால் செயலிலும் உயரலாம்; சிறப்படையலாம். நாட்டைக் காக்கும் நல்ல ஆண் மகனுக்கும் வீட்டைக் காக்கும் நல்ல பெண் மகளுக்கும் இந்த உள்ளப் பயிற்சி - உணர்வுப் பயிற்சி - இன்றியமையாதது. இந்த உணர்வுப் பயிற்சி - உணர்வுக்கலை - பல கலைகளுக்கு அடிதளமாக அமைகிறது. நல்லுணர்வைப் பயில்தலும் பயிற்றுவித்தலுமே நல்ல குடும்பத்திற்குத் தேவையான நற்பணியாகிறது. படிக்கும் ஆர்வமுடையவர்தான் பிறரைப் படிப்பிக்கின்ற பணியிலே - கலையிலே - வல்லவராக இயலும்; படிப்பவர் இல்லையெனின் படிப்பித்தலுக்கு இடமேயில்லையே!

பள்ளிப் படிப்பு இருந்தாலும் இல்லாவிட்டாலும், படிப்பதையும் படிப்பிப்பதையும் பணியாகக் கொண்டிருப்பவள் - அன்றுதொட்டு இன்றுவரை - தாயே ஆவாள். தாயின் உடலாய் - உள்ளமாய் - உணர்வாய்த் தோன்றும் மக்கள் தாயின் பிரதி பலிப்பே அல்லவா? குடும்பக்கலை, பள்ளியில் பயிற்றுவிக்கக்கூடிய கலை அல்ல; புத்தகங்களில்

வரையறுக்கப்படக்கூடிய கலையும் அல்ல. காலந் தோறும் காலந்தோறும் தோன்றும் மக்களின் உணர்வுக்கேற்ப, அவர் வாழ்க்கை இயலும், பண்பாடும் சிறப்புற்று வருவது இயல்பாகிறது. அப்படிப்பட்ட ஒரு கலையை - வாழ்க்கைக் கலையை - ஆரவாரமின்றி - அருக்கஊளயிலேயே - அன்பு மனையிலேயே - ஆழ்ந்த உணர்வோடு பயிற்றுவிப்பவள் தாய்.

பானையை உருவாக்குபவன் கையிலகப்படுவது வெறும் ஈரமண்; உடுவமற்றது; உறுதியற்றது. எனினும் கண்டவர் களிப்புற, விலை கொடுத்து வாங்கியவர் பயன்பெற, அந்த மண்ணையும் தகுதியுடையதாக்குகின்ற திறன் தொழிலாளியினுடையது. அவன் எண்ணப்படி சுழல்வது அவன் பானை வனையும் சக்கரம். அச்சக்கரச் சுழற்சியின் உயர்வுக் கேற்ப - உறுதிக்கேற்ப - அவன் உண்டாக்கும் பாத்திரங்கள் உயர்வடைகின்றன. குழந்தைகளும் பச்சைமண்ணை ஒத்தவர். பயிற்சிச் சக்கரத்தில் பக்குவமாய்ச் சுழலவிட்டால் அவர்கள் பயிற்சிக் காரனின் எண்ணங்களுக்கேற்ப உருவாகின்றவர். 'தாயைப்போல பிள்ளை, நூலைப்போல சேலை' அல்லவா?

குடும்பத்தில் தாய்மட்டுமல்ல; தந்தை, உடன் பிறந்தார், சுற்றத்தார், நண்பர், விருந்தினர் அனைவரும் இருக்கின்றனர். ஒவ்வொருவருக்கும் தனித் தனி பண்புகள், விருப்பு வெறுப்பு, பெருமை சிறுமை, வலிமை எளிமை, இன்பம் துன்பம் எல்லாம்

உண்டு. இத்தகைய பண்புடையவர்களை எல்லாம் உணர்வால் ஒன்றித்து வாழச் செய்வதே வாழ்க்கை; அதுவே குடும்பக்கலை. இதற்குத் தன் நலமற்ற தன்மையே தகுதியாக அமைகிறது. தன்னையே தலைவனாக்கிக் கொள்ளாமல், பிறரையே அடிமையாக்கிக் கொள்ளாமல், தலைவனாகவும் அடிமையாகவும் இணங்கிவாழப் பயில்வதே வாழ்க்கைக் கலை. அடங்கத் தெரிந்தவர்க்குத்தானே ஆளத் தெரியும்! ஆகையினால், இந்தப் பயிற்சியை - அடங்கும் பயிற்சியை - ஆளும் பயிற்சியை நமக்கு அளிக்கும் இடம் குடும்பமேயல்லவா? நல்ல தாய் நல்ல பயிற்சியாளராக இருப்பதில் வியப்பில்லையே!

பயிற்சியிலே பண்பட்டவள் பயிற்சிக் களத்தின் இயக்குனராகிறாள்; ஆம். பல கலைகளைப் பயில்விக்கின்ற - பயிலப் பழக்குகின்ற பயில வாய்ப்பளிக்கின்ற இடம் பல்கலைக்கழகமல்லவா? பலவேறு குணங்களையுடைய குடும்பத்தினரை ஒருங்கே ஒரே குறிக்கோளுடன் இயங்கி வாழ வைப்பவள் - வழிகாட்டுபவள் தாய். அவளே குடும்பத்தின் இயக்குனர். அடக்கம், பொறுமை, அன்பு, ஆற்றல் இவையே அந்தத் தலைவியின் - தாயின் - இயக்குநனரின் - அடிப்படைப் பண்புகளாக - தகுதிகளாக - அமைகின்றன. பலவேறு நோக்குகளையும் போக்குகளையும் முறைப்படுத்தி - வழிப்படுத்தி - உயர்ந்த நல்வாழ்வைப் பெறும் குறிக்கோளை - கொள்கையை வித்திட்டு

வளர்த்து, ஆலாய்த் தழைக்கச் செய்வது அவள் கடமையாகிறது. அந்த ஆற்றல் தாயின் தனி ஆற்றல் - தன் நலமற்ற ஆற்றலாகும். இந்த ஆற்றல் பெண்களுக்கே சிறப்பாயமைந்த ஆற்றல். ஆகவேதான் நாட்டுக்கு நல்ல மகனை உருவாக்கு வதைவிட வீட்டுக்கு நல்ல மகளை உருவாக்குவதில் தாய் ஊக்கம் காட்டுகிருள். பெருமுயற்சி எடுத் துக்கொள்கிருள். இந்த மகள் நாளைக்கு நல்ல தொரு வீட்டை விளங்கவைக்க வேண்டியவ ளல்லவா? எனவே, மிக எச்சரிக்கையோடு மகளை வளர்க்க - வாழவைக்க விரும்புகிருள் தாய்.

இந்த வளர்ச்சியும் பயிற்சியும் நம் சமுதாய அமைப்பிலே இயல்பாகவே அமைந்து விடுகிறது. பத்து ஆண்டுகள்வரை பதருமல், பாராட்டி, சீராட்டி, வளர்த்த மகளை அதற்குப்பின் இன்னு மொரு பத்து ஆண்டுகள் - அடங்கி, அடக்கி, அச் சத்தோடு வளர்க்கிருள் தாய். ஏன்? வீட்டிலே பெற்ற பயிற்சி அதற்கு அப்பாலும் நல்ல பயிற்சி யாக அமையவேண்டுமே என்ற ஏக்கம்; ஆர்வம்; அதுமட்டுமா? அஞ்சுகிருள்; அலேமோதுகின்ருள். ஆம். தாய் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டிய காலம். ஆனுல், மகளுக்கு இளமை துடிப்பு மிக்க காலம் இது; கண்டதை எல்லாம் காட்சியாகக் கொள்ளும் கனவுக் காலம். உடல் வளர்ச்சியைப் போலவே உள்ள வளர்ச்சியும் விரைவாக வளரும் காலம். இக்காலத்தில் ஏற்படுகின்ற சூழல்களை வெற்றிகாண பயனுடைய சூழல்களாக்கிக்கொள்ள

முதல் பத்தாண்டு காலத்தில் அவள் பெற்ற உறுதி யான உள்ளப் பயிற்சி உதவியாக இருத்தல்வேண் டும். பின்னர் அவள் தானுகவே - தனியாகவே - உலக இயல்புகளின் உண்மைகளை உணர்ந்து - ஒரு சிறிதும் ஏமாருமல் வாழும் பயிற்சியைப் பெற்றுவிடுகிருள்.

பெண்களை வளர்ப்பதில் தாய்க்கு இருக்கும் அல்லல்கள் பலப்பல. கடிவாளமிட்ட—கண்மறை விட்ட — குதிரையைப்போல நேரான வழியில் அவளை நடத்திச் செல்லத் தாய்க்குத் தனி ஆற்றல் தேவை என்பதை யாரும் மறுக்க முடியாது; மறக்க வும் முடியாது. 'பெண்ணே கண்ணே?' என்பர் பெரியோர். கண் புண்ணுகிவிடாமல் காக்க வேண் டியது தாயின் கடமையல்லவா ? சொல்லவும் முடி யாமல் மெல்லவும் முடியாமல் தவிக்க வேண்டிய பரபரப்புகள் பல தாய்க்கு ஏற்படுவது இயல்பே; இவற்றை எல்லாம் புறங்கான—வெற்றிபெற— மகளுக்கு உள்ள உரமும், உணர்வுத் திறனும் அடிப்படையாயமைதல் இன்றியமையாததாகிறது. புயலில் சிக்கிய ஓங்கி உயர்ந்த தென்னையாயில்லா மல் வளைந்து தழைந்து சிக்கலிலிருந்து சிறப்பாய் விடுபடும் புல்லாய்—நாணலாயிருக்க அவளைப் பழக்க வேண்டும். இப்பழக்கத்திற்கு உளவியல் பயிற்சியும் தேவையாகிறது. பிறருடைய உள வியலைச் சரியாகத் தெரிந்துகொள்ள—புரிந்து கொள்ளக்கூடிய பயிற்சியையும் மகளுக்குத் தர வேண்டும். அந்தப் பயிற்சியே அவளை ஒரு நல்ல தாயாக உருவாக்குமென்பதில் ஐயமில்லை.

குழந்தைகள் தாயின் பழக்க வழக்கங்களையே கண்கண்ட காட்சியாகக் கொள்கின்றனர். எனவே பெண்ணைப் பெற்றவள் மிக எச்சரிக்கையாக அவர்களுக்கு முன்மாதிரியாக நடந்து கொள்ளுதல் வேண்டும். பொறுமைப் பயிற்சி இருந்தால் அன்புப் பயிற்சி தானகவே வந்துவிடும். வீட்டுச் சூழலில், விருப்பமில்லாத பேச்சுகள், எதிர்ப்புப் பேச்சுகள், சண்டைகள், வம்புகள், பயனற்ற எதிர்ப்புகள், பிறரைத் துன்புறுத்தும் சொற்கள், வாய் வீச்சுகள் இவற்றை விட்டுவிடுதல் பயனளிக்கக்கூடிய செயல்கள். குழந்தைகளுக்கிடையே தாய் காட்டும் ஏற்றத் தாழ்வே அவர்களுக்குள் குழப்பங்களை உண்டு பண்ணும்; இது உயர்வு மனப்பான்மையை அல்லது தாழ்வு மனப்பான்மையை வளர்த்து விடும். அன்றியும் இவர்களுக்குக் காட்டும் அன்பிலே வேறுபாடு இருத்தல் கூடாது. இது இளம் உள்ளங்களில் பொறுமையை உண்டாக்கும்; பொறுமையும் அன்பும் இல்லையெனில் சிறுசிறு வேறுபாடுகள்கூட குழப்பங்களை ஏற்படுத்தும். ஆட்டமில்லாத அன்பிற்கு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை தேவையானது. இந்த மனப்பயிற்சி அன்பை வளர்க்கும்; பொறுமையைப் பெருக்கும். தான் என்ற ஆணவத்தைத் தகர்க்கும்.

இன்றைய அறிவியல் உலகிலே பெண்களுக்கு வீடு சிறியதாகிக் கொண்டே வருகிறது. வெளி உலகம் மிகப் பெரியதாய்—தீய சோதனைகள் நிறைந்ததாய்—எண்ணங்களையும் இயல்புகளையும்

ஈர்க்கக் கூடியதாய்—கற்றுக் கொடுக்கக்கூடிய தாய் இருக்கின்றது. ஆகையினால் விரும்பத்தகாத பழக்க வழக்கங்களே வளர்ந்து வருகின்றன. இந் நிலையில் ‘செய்யாதே, செய்யாதே’ என்று எதிர் மறையிலே எச்சரிப்பதைவிட அதனால் மகளின் வெறுப்பை வளர்ப்பதைவிட—கெட்ட பழக்க வழக்கங்கள் இவை இவை என்று எடுத்துக்கூறி, அவைகளில் ஈடுபட்ட பெண்கள்—தங்கள் செயல் களினால் இன்றைக்கு சமுதாயத்தில் துன்புற்று வாழும் இழிநிலைகளை எடுத்துக் காட்டி நேரான வழிகளைத் தேர்ந்தெடுக்கும் ஆற்றலைப் பயிற்று வித்தல் வேண்டும். நன்மைகள் மிகுந்திருந்த காலத்தில் நன்மைகளைப் பற்றியே தெரிந்து கொள்ள வேண்டியது நன்மையாயிருந்தது. இன்று நீரினின்றும் பால் எடுக்க வேண்டிய நிலை உருவாகிவிட்டதால் நீரையும் பாலையும் இனம் கண்டுகொள்ளக்கூடிய திறன் தேவையாகிவிட் டது. அதை அளப்பதற்கு அறிவியல் ஒரு ‘லாக்டா மீட்டரை’த் தந்துள்ளதே! உண்மையை யும் நகலையும் வேறுபடுத்திக் காணப் பெண் உள் ளத்திற்கு ஒரு அளவுகோல் வேண்டாவா ?

மனப் பயிற்சி மட்டும் முறையாக ஏற்பட்டு விட்டால் சிக்கல்களை அவிழ்க்கும் திறனும் தானா கவே வந்துவிடும். உழைப்பு மிகுதியாலோ, உள் ளக் கிளர்ச்சிகளாலோ, வயது முதிர்ச்சியாலோ, சூழ்நிலை காரணமாகவோ தன்னிடத்திலே ஏற்படு கின்ற சில குறைகளைக்கூடத் தாய் நீக்க முற்படு தல் வேண்டும். பிறருக்கு உதவி செய்யும் பண்

பையும் பிறரை உதவி செய்யத் தூண்டும் பண்பை யும் வளர்க்க வேண்டும்.

இத்தகைய ஆழ்ந்த உணர்வும் அன்பும் இருக் குமாயின் குடும்பத்திலுள்ள பலருடன் ஒன்றி வாழும் திறன் தானுகவே வரும். மன வேறுபாடுகள் வேரற்றுப் போகும். சூழலுக்கேற்ற நல்லறிவைப் பயிலவும், சூழலை வெற்றிகாணப் பயில்வித்தலும் எளிதாக அமையும். கற்கவும் கற்பிக்கவும் அமைந்த இடம் பல்கலைக் கழகமாவதுபோல வாழ வும் வாழ்விக்கவும் பயிற்றுகின்ற நல்ல குடும்பம் நல்ல பல்கலைக் கழகமென்பதில் வியப்பில்லை அல்லவா ?

"நிலத்தின் தன்மை பயிர்க்குள தாகுமாம்;
நீசத் தொண்டும் மடமையும் கொண்டதாய்
தலத்தில் மாண்புயர் மக்களைப் பெற்றிடல்
சால வேயரி தாவதோர் செய்தியாம்"

என்ற பாரதியாரின் எச்சரிக்கையை மகளைப் பெற்ற ஒவ்வொரு தாயும் மனதில் கொள்ள வேண்டும்.

# இன்ப வாழ்க்கை இலக்கியம்

உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்று

—தொல்காப்பியம்—பொருள்—111

காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.

—தொல்காப்பியம்—190

யாயும் ஞாயும் யாரா கியரோ ?
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர் ?
யானும் நீயும் எவ்வழி அறிதும் ?
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே.

—குறுந்தொகை—40

——————————உளநாள்
ஒரோ ஒகை தம்முட் டழீஇ ஒரோஒகை
ஒன்றன்கூ றுடை உடுப்பவரே ஆயினும்
ஒன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை.

—பாலை பாடிய பெருங்கடுங்கோ—கலித்தொகை—
18 : 8—11

புதல்வற் கவைஇயினன் தந்தை மென்மொழிப்
புதல்வன் தாயோ இருவரும் கவையினள்
இனிது மன்றவர் கிடக்கை
நனியிரும் பரப்பினிவ் வுலகுட னுறுமே !

—பேயனுர்—ஐங்குறுநூறு—409

மனைக்குவிளக் காகிய வாணுதல் கணவன்
முனைக்குவரம் பாகிய வெள்வேல் நெடுந்தகை

புறநானூறு—314

அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்.

சிலப்பதிகாரம் 16: 71—3

இன் துணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக்கடம் பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்.

சிலப்பதிகாரம் 15 : 141—3

பெருந்தடங் கண்பிறை நுதலார்க் கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்து அன்றி விளைவன யாவையே ?

—கம்பராமாயணம்—67

உன்பெருந் தேவிஎன்னும் உரிமைக்கும் உன்னைப் பெற்ற
மன்பெரு மருகி என்னும் வாய்மைக்கும் மிதிலை மன்னன்
தன்பெருந் தனயை என்னும் தகைமைக்கும் தலைமை சான்றாள்
என்பெருந் தெய்வம் ஐயா இன்னமும் கேட்டி என்பான்.

விற்பெருந் தடந்தோள் வீர ! வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்தள் ஆய நங்கையைக் கண்டேன் அல்லேன்
இற்பிறப்(பு) என்ப தொன்றும் இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன்.

—கம்பராமாயணம்—6032, 6035

சொன்னகா ரியமனைத்தும் சொன்னபடி யியற்றுவளே?
என்னமிடி வரினும்வெளி யெடுத்தியம்பா இயலினளே ?
தன்னருநா யகன்பழிதூற் றுதயமையத் தக்கவளே ?
பன்னருமா மறையுணர்ந்த பளகறுநற் குணக்குன்றே !

—குசேல உபாக்கியாநம் (கி. பி. 19ஆம் நூற்றாண்டு)

# பழமொழிகள் குடும்பத்தில்
# குடும்பப் பழமொழிகள்!

- அடக்கமே பெண்ணுக்கு அழகு
- அடக்கமுடைய பெண்ணுக்கு அழகு ஏன்?
- ஆக்க வேண்டாம்; ஆளாக்க வேண்டாம்
  பெண்ணே! என்னருகில் இருந்தால்
  போதுமடி கண்ணே!
- ஆக்கி அரைத்துப் போட்டவள்
  எல்லாந்தான் கேட்பாள்!
- ஆணிக்கு இணங்கின பொன்னும்
  மாமிக்கு இணங்கிய பெண்ணும் அருமை!
- ஆணுக்குக் கேடு செய்தாலும் பெண்ணுக்குப்
  பிழை செய்தல் ஆகாது!
- ஆணுக்குப் பெண் அஸ்தமிச்சுப் போச்சோ?
- ஆணை அடித்து வளர்; பெண்ணைப்
  போற்றி வளர்!
- ஆபத்துக்காகாத பெண்சாதியை அழகுக்கா
  வைத்திருப்பது?
- ஆருமற்றதே தாரம்; ஊரில் ஒருவனே
  தோழன்!
- உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு!
- உலகில் பெண் என்றால் பேயும் இரங்கும்!
- குலப் பெண் என்றால் பேயும் இரங்கும்!
- குலப் பெண் தன் கணவனையும் வேறு பெண்
  தன் மேனியையும் பேணுவாள்!
- குலமகட்கு அழகு கொழுநனைப் பேணுதல்!

- தாயில்லாப் பிள்ளை ஊருக்காகுமோ?
- தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை!
- தாயும் பிள்ளையும் ஆனாலும்
  வாயும் வயிறும் வேறு!
- தாயைக் கொன்றவனுக்கு ஊரிலே பாதிப்பேர்
- தாயைத் தண்ணீர்த் துறையில் பார்த்தால்,
  பிள்ளையை வீட்டில் பார்க்க வேண்டியதில்லை
- தாய்க்குப் பின் தாரம்!
- பெற்ற மனம் பித்து; பிள்ளை மனம் கல்லு!
- பெண் என்றால் பேயும் இரங்கும்!
- பெண்சாதி காற்கட்டு; பிள்ளை வாய்க்கட்டு!
- பெண்சாதி முகத்தைப் பார்க்கா விட்டாலும்
  பிள்ளை முகத்தைப் பார்க்க வேண்டும்
- பெண்டாட்டி ஆசை திண்டாட்டத்தில்
  விட்டது!
- பானை பிடித்தவள் பாக்கியம்!
- பெண்ணுக்கு மாமியாரும் பிள்ளைக்கு
  வாத்தியாரும்!
- பெண்ணைக் கொடுத்தவனோ, கண்ணைக்
  கொடுத்தவனோ?
- பெண்டென்று பிறந்தபோதே புருஷனும்
  பிறந்திருப்பான்
- பெண் புத்தி பின் புத்தி!
- மனைவியில்லாத புருஷன் அரை மனிதன்!
- மாதா பிதா செய்தது மக்களுக்கு!

# டாக்டர் ந. சஞ்சீவி அவர்களின் சில நூல்கள் பற்றிச் சில சொற்கள்

## ஆராய்ச்சிக் கட்டுரைகள்

Mr. N. Sanjeevi has a knack for choosing most interesting themes for his essays, written in the best of style, in alliterative, chaste prose of very high order. The present volume of his essays shows above all the surprising width of his interests-he is equally well versed in history, in literary criticism and in philology.

Prof. Dr. Kamil Zvelebil (1962)

*ஜெர்மானியர்களிடத்தில்தான் இத்தகைய அயரா உழைப்பைக் காண முடியும்.*

**மாண்புமிகு நீதிபதி எஸ். மகராஜன் (1971)**

## இலக்கிய இயல் அ, ஆ

His interests are wide-ranging, and he brings to his writing the discipline of hard-headed research as well as the clarity that flows from close conceptual analysis.

The world's richest veins of thought have a fascination for him, and he would, if he could, integrate the seminal findings of the latest Western research with what is perennial in the Tamil heritage.

Prof. Dr. K. R. Srinivasa Iyengar (1974)

*பகுப்பும் தொகுப்புமாகப் பலவற்றை விளக்குகையில் வரைபட முறையைக் கையாண்டு ஆங்காங்குத் தெளிவுறுத்திச் செல்லுதல் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளது இலக்கிய ஆய்வில் ஈடுபாடு கொண்டோர் அனைவரும் வரவேற்கத்தக்க நல்ல நூல் இது.*

**டாக்டர் மு. வரதராசனார் (1974)**